# திருப்புத்தூர் திருத்தளி



3191

குன்றக்குடி பெரிய பெருமாள்.

உ

திருப்புத்தூர்

# திருத்தளிநாதர் பைரவர் திருக்கோயில்

## திருத்தல வரலாறு

'எழுத்துச் செம்மல்'

குன்றக்குடி பெரியபெருமாள்

திருவண்ணாமலை ஆதீனம்
பிரான்மலை வகை ஐந்து கோயில்கள் தலைமை அலுவலகம்
குன்றக்குடி - 623 206
பசும்பொன் தேவர் மாவட்டம்

★ உரிமைப் பதிவு

★ ஆகஸ்ட் 1992

★ திருப்பத்தூர் திருத்தளி

**திருக்கூட நன்னீராட்டு**

விழாவில் வெளியிடப் பெற்றது.

**[24-8-92]**

★ விலை ரூ **11**

---

அச்சிட்டோர் :

*ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்,*

குன்றக்குடி - 623 206

# வணக்கம்

உண்மைதான்!
'வகுத்தான் வகுத்த வகை' என்பாரே திருவள்ளுவர்!
அந்த 'வகை'யால் கிடைத்த வாய்ப்பு இது!

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகள் வரலாற்றுத் தொடர்பு
கொண்ட 'திருப்புத்தூர் திருத்தளி' பற்றி எழுதக் கிடைத்த
வாய்ப்பு - எழுதரிய வாய்ப்பல்லவா?
வாய்ப்பை வழங்கி அருளியவர்கள்-
அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள்.
ஒன்றும் அறியா அடியேனிடம், 'நன்று செய்வாய்'
எனத் தவத்திரு அடிகளார் நம்பிக்கை கொண்டது
எதனால்?
அதனை-
பேறு என்பேனா? பெரும் புண்ணியம் என்பேனா?
ஆகூழ் என்பேனா? அதிட்டம் என்பேனா?
என்னென்பேன்?

எழுத்தாலும், எடுத்துச் சொன்ன கருத்தாலும்
இந் நூலை உருவாக்கத் துணை நின்றவர் மூவர்.
அவர்கள்: டாக்டர் இரா. கலைக்கோவன்,
பேராசிரியர் வள்ளி சொக்கலிங்கம்,
கவிஞர் மரு. பரமகுரு.

ஆமாம்!-
எழுத்தில் உருவான கருத்துகளை
இதயத்துள் முகிழ்க்கச் செய்தது எது?
அது-வையகம் படைத்தது! வாழ்வினை வகுத்தது!

வகுத்த மூலத்தை வழிபடுகின்றேன்.
வாய்ப்பளித்த அடிகளைத் தொழுது போற்றுகின்றேன்.
நூலை-
வடிவமைக்கத் துணை நின்ற மூவரை
நினைந்து நெகிழ்கின்றேன்.
வரலாற்றை-
வாசிக்க இருக்கும் உங்களை
வணங்கி மகிழ்கின்றேன்.

- குன்றக்குடி பெரியபெருமான்

# வாழ்த்து

## திருவண்ணாமலை ஆதீனப் புலவர்
### மரு. பரமகுரு

தேனொழுகு கொன்றையணி செஞ்சடையன் எம்மான்
திகழ்பாண்டிப் பதிகளிலே திருப்புத்தூர் ஒன்று!
ஞானமொழித் தமிழ்மாலை நயமுடனே சாத்தி
நாவரசர் சம்பந்தர் தொழுததலம்; சேர
மானுடனே ஆரூரர் வந்துவழி பட்ட
மாபெருமை யுடையதலம்; மரகதவண் ணத்து
மேனிசிவ காமியுட னானதிருத் தளியான்
விரும்பியமர்ந் தருள்பொழியும் பெருஞ்சிறப்புத் தலமே!

யோகபயி ரவமூர்த்தி உலகவுயிர்க் கெல்லாம்
உவந்தருளைச் சுரந்துநலம் புரிந்துவரும் தலமாம்!
பாகுமொழித் திருப்புகழைப் பருகுதிரு முருகன்
பச்சைமயி லேறியருள் பாலிக்கும் தலமாம்!
மேகநிற மால், கவுரி, இலக்குமியும் பிறரும்
மேலவனைப் பூசித்துப் பேறுபெற்ற தலமாம்!
ஏகனவன் திருத்தளியான் எழுந்தருளி யிருக்கும்
இத்தலத்துப் பெருமைஎன தெழுத்திலடங் கிடுமோ?

செப்பரிய அனுபூதிச் செல்வர்அருட் குருவாம்
திருவண்ணா மலைஉதித்த தெய்வசிகா மணியின்
வைப்பெனக்குன் றக்குடியில் வயங்கிடும்ஆ தீன
மரபின்அருள் நெறித்தந்தை அறங்காவல் சிறப்ப(து)
இப்புனிதத் தலமாகும்; இதன் இனிய வரலா(று)
எழுதுகென எம்மடிகள், அப்பணியை ஏற்று
முப்பழத்தின் சாறுபிழிந் தட்டசுவைத் தமிழில்
முற்றுவித்தார் பெரியபெரு மாள்;எழுத்துச் செம்மல்

இந்நூலோர் மணிப்பேழை; எடுத்துவைத்த புதையல்!
இனியதமிழ் கைகுலுக்கி நம்மைவர வேற்கும்!
பன்னாளும் அறியாமற் கிடந்தபழம் செய்தி
பற்பலவும் கண்முன்னே கொண்டுவந்து காட்டும்!
தென்னாட்டுக் கலைச்சிறப்பை, கல்லெழுத்தை ஆய்ந்து
திருப்புத்தூர்ப் பெருமையினை திசையெட்டும் பரப்பும்!
இந்நூலின் ஆசிரியர் பெரியபெரு மாளை
இதயத்தால் பாராட்டி மகிழ்கின்றேன்! வாழ்க!

# பகுதியும் பக்கமும்


| | | |
|---|---|---|
| 1. | தேரோடும் நெடுவீதித் திருப்புத்தூர் | 1 |
| 2. | திருப்புத்தூர் அமைந்த திருத்தளி | 9 |
| 3. | திருத்தளி அமைந்த திருவருள் மூர்த்தங்கள் | 17 |
| 4. | திருவருள் மூர்த்தம் ஒன்றில் கௌரி தாண்டவச் சிறப்பு | 24 |
| 5. | சிறப்பிற்குரிய பைரவர் சந்நிதி | 31 |
| 6. | சந்நிதிகள் கொண்ட திருக்கோயில் வனப்பு | 39 |
| 7. | வனப்பு மிக்கச் செப்புத் திருமேனிகள் | 46 |
| 8. | திருமேனிகள் அமைந்த திருத்தளிப் புராண வரலாறு | 53 |
| 9. | வரலாறு காட்டும் கல்வெட்டு அமைப்புகள் | 58 |
| 10. | அமைப்பும், விழாவும், ஆலய நிர்வாகச் சிறப்பும் | 64 |
| 11. | சிறப்புச் செய்திகள் | 72 |
| 12. | திருப்புத்தூர் திருப்பதிகங்கள் | 77 |
| 13. | திருப்புத்தூர் திருப்புகழ் | 82 |




உ

திருக்கயிலாய பரம்பரை

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்

45ஆவது மகா சந்நிதானம்

**திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்**

(இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்)

திருவுளப் பாங்கின் வண்ணம் எழுதப்பெற்றது.

# திருப்புத்தூர்
# திருத்தளிநாதர் பைரவர் திருக்கோயில் திருத்தல வரலாறு

—★—

## 1. தேரோடும் நெடுவீதித் திருப்புத்தூர்

"இசை விளங்கும் எழில் சூழ்ந்த, திசை விளங்கும் பொழில் சூழ்ந்த திருப்புத்தூர்', எனப் பாடியருளியுள்ளார் ஞானச் செல்வர் சம்பந்தப் பெருமான்.

அருட்செல்வர் அப்பர் சுவாமிகளின் திருவாக்கோ, "திருமருவு பொழில் புடை சூழ் தேராரும் நெடுவீதித் திருப்புத்தூர்" எனச் சிந்திக்கிறது.

பாட்டும், சிந்தனையும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் அருட்பதிகத் திருப்பதிவுகள்!

திருஞானசம்பந்தர் வருகை

ஞானச் செல்வர் சம்பந்தப்பெருமான் மதுரை சென்றார். சமணரை வென்றார். பாதை தவறிய பாண்டிய மன்னனின் மனத்தைப் பக்குவப்படுத்திச் சிவமணம் கமழச்செய்தார். அயல் வழக்கால் பாழ்பட்டு,சமணர்செயலால் தாழ்வுற்று,அயர்ந்து நின்ற பாண்டி நாட்டுத் தலைப்பதியைப் பரிவு காட்டி வாழ்வித்தார். மன்னன் நீறணிந்தான். வேதநெறித் தழைத்தோங்கியது. சைவத்துறை செழித்துப் படர்ந்தது. மாதேவி மங்கையர்க்கரசியார் மனம் மகிழ்ந்தார். அமைச்சர் குலச்சிறையார் அகம் நெகிழ்ந்தார். மதுரையில் வாழ்ந்தோர் நாள் தோறும், ஞானத்தின் திருவுருவை, நான் மறையின் தனித் துணையைக் கண்டு தரிசித்தும், பெருமானின் தெய்வ கானத்தைக் கேட்டு இன்புற்றும் கனிந்து உருகினர்! களிப்பில் மிதந்தனர்! மன்னன் மாற்றம் பெற்றதும் மதுரை ஏற்றம் பெற்றதும் தென்னவன் நாடு

முழுவதும் தித்திப்புச் செய்திகள் ஆயின! மங்கையர்க்கரசியாரின் அழைப்பை ஏற்று, மதுரை வந்த சம்பந்த பெருமான் பாண்டி நாட்டில் சூழ்ந்திருந்தஇருள்அகற்றிச் சைவச் சுடரொளி பரவிடச்செய்த பின்பு, சோழநாடு செல்ல சித்தம் கொண்டார். மதுரையினின் றும் புறப்பட்டபோது,பாண்டிநாட்டுப்பதிகள் பலவற்றை வணங்கத்திருவுளம் கொண்டார்- வாழ்வாங்கு வாழ வழி காட்டிய ஞானச் செல்வர்.

அடியார்கள் புடை சூழ சம்பந்தப் பெருமான் மேற்கொண்ட திருத்தலவழிபாட்டுப் பயணத் தில் பாண்டிமாதேவி மங்கையர்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும், பாண்டிய மன்னனும் உடன் வந்தனர். தென்னவர் நாட்டுத்திருத்தலங்கள் பலவற்றிற்கும்சென்று வழிபட்டுத் திருப்புத்தூரை வந்தடைந்தார் தெய்வப் பிள்ளையார் ஞானசம்பந்த பெருமான். உடன் வந்தவர் அனைவரும் பெருமானுடன் ஒருசில நாள்கள் திருப்புத்தூ ரில் தங்கியிருந்தனர்.

பெருகி வாழும் பெருமானாகவும், பிரமனும் மாலும் அறியாப் பெரியோனாகவும் திருப்புத் தூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தொழுது போற்றித் தூய தமிழ்த் திருப்பதிகம் ஒன்றை நேயமுடன் பாடியருளினார்- நிலமகள் பெற்ற நிகரிலாச் செல்வர் தெய்வப் பிள்ளையார்.

பாசுரம் காட்டும் திருப்புத்தூர்

தெய்வப் பிள்ளையார் ஞான சம்பந்தப் பெரு மான் அருளிய பதினொரு பாடல்களைக் கொண்ட திருப்புத்தூர்த் திருப்பதிகம், அன் றையத் திருப்புத்தூரின் வளம் மிகுந்த நலச் சூழலைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. வானோங்கிய கொன்றை மரங்கள், வளம் கொழிக்கும் மலர்ச் சோலைகள், தேன் பிளிற் றும் பூக்காடுகளாகத் திகழ்கின்றன! புனல்

ஓடும் பொழில்கள், நீர் தாங்கும் எழிற் குளங்கள், 'கும்'மென மணம்தவழும் குளப்பூக்கள், குளிர்மை ஊட்டுகின்றன! விண்ணில் மழை மேகங்கள், மண்ணில் மலர் தேடும் வண்டுகள், தெரு ஓடும் மயில்கள் கண்ணில் தெரிகின்ற இடமெல்லாம் களிப்பூட்டும் அழகின் நடனங்கள் என்றெல்லாம் பதிகத்தில் பதிவாகியுள்ள செய்திகள் ஏழாம் நூற்றாண்டில் திருப்புத்தூரின் வகை வகையான வண்ண வளங்கள் எண்ணத்தைக் கவர்வனவாய் உள்ளன.

அப்பர் சுவாமிகள் வருகை

பாண்டிய நாட்டிலிருந்து சென்ற ஞானச் செல்வர் சம்பந்தப் பெருமான், சோழ நாட்டின் திருப்பூந்துருத்தியில் வீற்றிருந்த அருட்செல்வர் திருநாவுக்கரசரைச் சந்தித்து, மதுரை நிகழ்ச்சிகளை மகிழ்ந்துரைத்தார். மங்கையர்க்கரசியாரையும், குலச்சிறையாரையும் பார்த்துமகிழவும், பாண்டி நாட்டுத் திருத்தலங்களைக் கண்டு தரிசிக்கவும் ஆர்வம் மிகக் கொண்டு, அருட்செல்வர் அப்பர் சுவாமிகள் பாண்டியநாட்டிற்குப் பயணப்பட்டார். திருப்புத்தூர் வருகைபுரிந்த சுவாமிகள் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள திருத்தளி நாதரை கசிந்து, கண்ணீர் மல்கிப் போற்றி வணங்கினார்; ஏற்றிப் பாடினார்.

சுவாமிகள் கண்ட திருப்புத்தூர்

அருட்செல்வர் அப்பர்சுவாமிகள் பாடியருளிய பத்துப் பாடல்களைக் கொண்ட பைந்தமிழ் திருப்பதிகத்தில் திருப்புத்தூரின் 'ஊரழகு' மிகஉயர்வாகச்சித்திரிக்கப்பெற்றுள்ளது.மாட மாளிகைகளைக் கொண்டுள்ள திருப்புத்தூர்த் தெருக்கள் நீண்டு அகன்று தேரோடும் பெரு வீதிகளாய் விளங்கின! பச்சைப் பசேலெனப் பசுமையான வயல்கள் சூழ்ந்திருந்தன! பூக்கள் சுமந்த கொன்றை மரங்கள் ஊருக்குப் பொலிவூட்டிநின்றன! ஊரினிடையேபெருகிக் கிடக்கும் நீர் நிலைகளில் எருமைகள் மூழ்கிச் சுகம் பெற்றன! வயல் புறத்து நீர்ச் சேம்புகளும்,வளம்கொழிக்கும் சோலை வண்டுகளும்

திருப்புத்தூரின் புகழைஇசைத்து மகிழ்ந்தன! செல்வமும், செழுமையும், எழிலும், ஈர்ப்பும் கொண்ட 'திருமருவுமணிமாடத்திருப்புத்தூர்' என அப்பர் சுவாமிகள் ஊரின் அழகிய திருக் கோலம் கண்டு மகிழ்ந்துள்ளார்.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன், சேக்கிழார் பெருமான் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்தில், ஞான சம்பந்தப் பெருமானின் பாண்டி நாட்டு யாத்திரையைக் கூறுகின்ற போது, ''பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து'' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

திருப்புத்தூர் சைவத் திருமடம் ஒன்றில் வாழ்ந்திருந்த மெய்கண்ட சந்தான அருளாளர் மறைஞான சம்பந்தர் கி.பி. 1484 இல் திருத்தளிப் புராணம் இயற்றி அருளியதாகக் கல்வெட்டுச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

அருணகிரிப் பெருமான் வருகை

திருமுருகன் வீற்றிருக்கும் திருத்தலங்கள் தோறும் சென்று, முருகப் பெருமானை வழிபட்டு, பல்லாயிரக் கணக்கான பாடல்களை அருளித் திருப்புகழாக்கி இன்புற்றவர் அருணகிரியார். அருட் கடலாய்த் திகழ்ந்த அருணகிரியார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருப்புத்தூரைத் தேடி வந்து, திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணிய சுவாமியை நாடிச் சென்று, இரண்டு திருப் புகழ் பாடி அருளியுள்ளார். அருணகிரியாரின் திருப்புகழ் 'வயலியல் திருப்புத்தூர்' எனக்குறிப்பிட்டு ஊரின் இயல்பை உயர்வாகக் காட்டுகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முன், வடமொழியிலுள்ள நூல்கள் – 'மயூரகிரி மான்மியம்' 'மயூர கிரிப்புராணம்' எனத் தலைப்பிட்டுத் தமிழில் இயற்றப்பெற்றன. வேதாந்தம் சுப்பிரமணிய பிள்ளையால் இயற்றப்பெற்ற இப்புராண

குன்றக்குடித் திருத்தலத்தையும், அங்குஎழுந்தருளியுள்ள சண்முகநாதப் பெருமானையும் முறையே விவரித்தும், வேண்டியும் எழுதப் பெற்ற தெய்வத் திருநூல்கள் இத்திருநூல்கள் திருப்புத்தூரைக் 'கொன்றைவனம்' என்றே குறிப்பிட்டு, வளமிக்கப் பொழில் சூழ்ந்த செழுமை பெற்ற சீரூராய்ச் சிறப்பித்துள்ளன.

கொன்றை வனம்

பதினெட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப் பெற்ற "சிவகங்கைசரித்திரக் கும்மியும் அம்மானையும்" எனும் இலக்கியத்தில் திருப்புத்தூரில் பலமிக்கதொரு கோட்டை இருந்ததைத் தெரிவிப்பதுடன் மருதுசகோதரர்களுக்கும் ஆங்கிலேய கும்பெனியாருக்கும் நடந்த சண்டையைப்பற்றி விரிவாகக்காட்டுகின்றது கோட்டைக்குள்ளே கோயில் இருந்ததைத் தெளிவாக, "தேரும், திருக்குளமும்,சிவாலயமும் சிறந்த திருப்புத்தூர்க் கோட்டைக் குள்ளே" எனச் சுட்டியிருப்பது நினைக்கத் தக்கது. பதினெட்டாம் நூற்றாண்டில் 'திருப்புத்தூர்' 'திருப்பத்தூர்' எனஅழைக்கப் பெற்றிருப்பதை அம்மானைப் பாட்டின் அனேக இடங்களில் பயன்படுத்தியுள்ளதைப் படிக்கின்றபோது அறியலாம்.

புகழ் நூல்கள்

வடமொழி 'ஸ்தல புராணம்' 'திருப்புத்தூர் புராணம்' 'சேது புராணம்' 'சூரைக்குடிப் புராணம்' 'திருப்புத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி' திரிகூடராசப்பகவி ராயரால் இயற்றப் பெற்ற 'திருக்கோட்டியூர் திருப்புத்தூர்களின் பள்ளியேசல்' ஆகிய நூல்களில் திருப்புத்தூரைப் பற்றிய செய்திகள் சிறப்பித்துப் பேசப் பெறுகின்றன.

கற்களில் எழுத்துக்களைப் பொறித்துச்செய்திகளை வரலாற்றுச் சான்றுகளாக அமைக்கும் வழக்கம், பண்டைக் காலம் முதலாகவே

பழக்கமாக, இருந்து வந்து உள்ளது. இத்தகைய எழுத்துகள் கல்வெட்டு எனக் குறிப்பிடப்படுகின்றன. இவை பல்வேறு காலங்களில் பல்வேறு வரிவடிவங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. சரித்திர நிகழ்வுகளையும், செய்திகளையும் எடுத்தியம்பும் கல்வெட்டுகள் நூற்றுக்கும் மேற்பட்டு, திருப்புத்தூர் திருக்கோயில்களில் இடம் பெற்றுள்ளன. வட்டெழுத்து, தமிழ், கிரந்தம் ஆகியஎழுத்துகளாலான கல்வெட்டுகள் திருத்தளிநாதர் திருக்கோயிலிலும், அங்காளம்மன் கோயில், பூமாயி அம்மன்கோயில், வாணியங்கோயில், அனுமார்கோயில், முனீஸ்வரர்கோயில்ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. கி பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலங்களைச் சேர்ந்தவையே திருப்புத்தூரில் உள்ளவை. இருபதாம் நூற்றாண்டின் உதய காலம் முதலாக, இக்கல்வெட்டுகள் உரிய துறையினரால் படிக்கப் பெற்று, உரிய அறிக்கைகளாக (Annual Report of Epigraphy) உருவாக்கம் பெற்று வருகின்றன. இதுவரை எண்பதிற்கும் மேற்பட்டவைப் படித்துப் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இவ்வகையில் வரலாற்றுச் சிறப்புகளையும் செய்திகளையும் வழங்கி வரும் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேரூராய்த் திகழ்ந்து வருகிறது திருப்புத்தூர்.

கல்வெட்டுகள்

கி.பி. 8,9ஆம் நூற்றாண்டுகளில் 'கொழுவூர் கூற்றத்துப் பிரமதேயமான திருப்புத்தூர்' எனவும், 'கொழுவூர் கூற்றத்து மீகுண்டாற்று பிரம்மதேயமான திருப்புத்தூர்' என்றும் திருப்புத்தூர் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளது 'பிரமதேயம்' என்றால் அந்தணர்களுக்கு வழங்கிய பகுதி எனவும் 'தேவதானம்' என்றால் கோயிலுக்குச் சொந்தமானதெனவும் பொருள்பெறும்.

பிரமதேயம்

சோழர் ஆட்சியிலும் (10, 11ஆம் நூற்றாண்டுகள்) பிற்காலப் பாண்டியர் ஆண்டபோதும் (12, 13, 14 ஆம் நூற்றாண்டுகள்) விஜய நகர மன்னர்கள் காலத்திலும் (15, 16 ஆம் நூற்றாண்டுகள்) திருப்புத்தூர் - கேரளசிங்க வளநாட்டு பிரமதேயமான திருப்புத்தூர்' என்றும், 'பாண்டி மண்டலத்து கேரளசிங்க வளநாட்டு பிரமதேயமான திருப்புத்தூர்' என்றும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளன. பதினாறாம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் 'திருப்புத்தூர் சீர்மை' எனக் குறிப்பிடப் பெறுகின்றது. நாயக்கர் காலத்தில் 'சீர்மை' என்பது நாட்டுப் பிரிவாக அமைந்தது. தற்காலத்தில் வட்டம் (தாலுகா) எனக் கூறுகின்றோமே அத்தகைய பிரிவு தான் சீர்மை.

திருப்புத்தூர் திருமடங்கள்

திருத்தளிநாதர் கோயிலில் காணப்பெறும் சில கல்வெட்டுகளில் திருப்புத்தூரில் 'திருஞானசம்பந்தர் திருமடம்' 'திருத்தொண்டத்தொகையான் திருமடம்' 'திருச்சிற்றம்பலமுடையான் திருமடம்' ஆகிய கோளகித் திருமடங்கள் (சைவ சமயச் சார்புடையவை) நிறுவப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. 'மூலபரிடை' எனவும், 'மகாசபை' எனவும், 'பெருங்குறி' எனவும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறும். உயர் அமைப்பு திருப்புத்தூர் நியாய சபையாகவும், திருக்கோயில் நிர்வாக சபையாகவும் விளங்கி உள்ளது. திருப்புத்தூர் மகா சபையினர் உருவாகும் சிக்கல்களையும்உருவாக்கும்சிக்கல்களையும்தாங்களேமுயன்று தீர்ப்பர். முடியவில்லையெனில் மன்னரிடம் முறையிடுவர்.

ஏழாம் நூற்றாண்டிற்கு முன், சங்கம் மருவிய காலத்திலோ, சங்க காலத்திலோ இலக்கியங்களில் திருப்புத்தூர் பற்றிய செய்தி காணக்

கிடைக்கவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தைய கல்வெட்டுகளிலும், இதுவரை படித்துப் பதிவுசெய்தவைகளில் திருப்புத்தூர் பற்றிய குறிப்பு ஏதும் இருப்பதாகத் தெரிய இல்லை.

திருப்புத்தூர் பெயர்க் காரணம்

கொன்றைவனமாக இருந்தது, குடியேறிய மக்கள் வாழும் புதிய ஊராக ஆனதால் 'புத்தூர்' என அழைக்கப்பட்டுப் பின் 'திரு' எனும் அடைமொழி சேர்க்கப் பெற்றுத் திருப்புத்தூர் எனப்பட்டதாகக் கூறுவர். 'வால்மீகிபுரம்' என்றோர் பெயர் திருப்புத்தூருக்கு உண்டு. 'வால்மீகி' எனும் வடமொழிச் சொல்லுக்கு எறும்புப் புற்று எனும் பொருள் உண்டாம். அழகிய எறும்புப் புற்றுகள் உள்ள ஊர் என்னும் பொருள் பட 'திருப்புற்றூர்' என அழைக்கப் பெற்று பின் மருவி திருப்புத்தூர் ஆனதாகவும் ஒரு பெயர் விளக்கம் இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் வடக்கே ஒரு திருப்புத்தூர் இருப்பதால் இதனைத் தென் திருப்புத்தூர் என குறிப்பிடுவர். திருப்புத்தூரிலுள்ள கல்வெட்டுக்களில் பழைமையான கல்வெட்டுஒன்றில் 'நூதன கிராமம்' எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

தொன்மை வாய்ந்த திருத்தளிநாதர் கோயிலைத் தவிர திருப்புத்தூரில் மேற்குத் திருத்தளிநாதர் கோயில், நின்ற நாராயணப் பெருமாள்கோயில், அனுமன்கோயில், பூமாயி அம்மன்கோயில், வாணியங்கோயில், கருப்பர் கோயில், கிராம தேவதைகளுக்கென ஊரின் புறப்பகுதிகளில் பல ஐயனார் கோயில்கள் உள்ளன.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள வட்டத்தலைமை ஊர்களில் ஒன்றான திருப்புத்தூர் காரைக்குடியிலிருந்து 21 கி.மீ. தூரத்தில் உள்ளது. மதுரை – காரைக்குடி

சாலையில் அமைந்த பேரூர். குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருக்கோட்டியூர், காளையார்கோயில், பிரான்மலை ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய திருத்தலங்கள் திருப்புத்தூருக்கு அருகில் உள்ளன.

## 2 திருப்புத்தூர் அமைந்த திருத்தளி

உயிரினுள் உயிராய், உணர்வினுள் உணர்வாய், அறிவினுள் அறிவாய் விளங்கி, எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும் தனது எல்லையற்ற பேராற்றலால் மடங்கி அடங்கிக் கிடந்திடச்செய்து, பேரருள்பெருங் கடலாய்த் திகழும்பேரின்ப முழுமுதற் பெருங் கடவுளைக் காணவும், கருதவும் ஆர்வம் கொண்ட மகத்தான மானுட முயற்சியே திருவுருவ வழிபாடு! திருவுருவ வழிபாடு

இறைவனது திருவுருவத்திருமேனியை எழுந்தருளச் செய்விக்க முதலில் இருப்பிடம் கண்டனர். பின்னர் கட்டிடம் அமைத்துக் கடவுளர் திருமேனியை வீற்றிருக்கச் செய்து வழிபட்டனர் நம் முன்னோர்.

சங்க காலத்தில் எடுக்கப் பெற்ற கட்டட அமைப்பை மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம். கோட்டம், கோயில் கடவுளருக்கு எடுக்கப்பெறும் கட்டடங்களாகவும், அரண்மனை, கோட்டை நாட்டுக் காவலர்களாகிய மன்னர்களுக்கு உருவாக்கப் பெறும் கட்டடங்களாகவும், வீடு, மாளிகை, மக்கள் குடியிருப்பு இல்லங்களுக்கு கட்டப்பெறும் கட்டடங்களாகவும் அமைக்கப்பெற்றன. இம்மூன்றுபிரிவுகளில் நிலம், மனை, ஊர்தி, இருக்கைஎனும் பிரிவுகள்அடங்கும். இவைகளைமுறையோடு வகுத்துக் குறையின்றி உருவாக்கும் நெறித் கட்டடங்கள்

திறம் உணர்த்தும் 'மனைநூல்கள்' இருந்தன வென்பதை, சங்க இலக்கியங்களின் வழியே அறியமுடிகிறது.

உருவ வழிபாடு தோன்றிய உதய காலத்தில், கடவுள் திருமேனிகளை மரங்களின் அடியில் நிழல் தோய வைத்து, வணங்கும் வழக்கம் இருந்ததாகக்கூறப்படுகிறது. அந்தமரங்களே பின்னர் கோட்டமும் கோயிலும் உருவான தும் 'ஸ்தல விருட்சங்கள்' எனக் கொண்டாடப் பெறுவதாயும் சொல்லப்படுகிறது

சங்க காலத்தில் எழுப்பப் பெற்ற கடவுளர் கோட்டங்கள் மரத்தினால் அமைக்கப் பெற்றவை. மரக்கட்டடங்கள் வெயிலாலும் மழையாலும் விரைவில் பழுதுபட்டுவிடுவதை அறிந்து, மரத்தின் மேல் செப்புத் தகடுகளை வேய்வது பண்டைக் காலத்துப் பழக்கம். மரக் கட்டடம் எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் எனவே பிற்காலத்தில் செங்கல்லினாலும், சுண்ணாம்பினாலும் கோயில்களைக் கட்டத் தொடங்கினார்கள். செங்கற் கட்டிடங்கள் இருநூறு முந்நூறு ஆண்டுகளே பழுதில்லாமல் நின்றன. கால வளர்ச்சியில் கோயில் கட்டிட அமைப்பில் பெரிய பெரிய மலைகளை, பாறைகளைக்குடைந்து 'குகைக்கோயில்'கள் உருவாக்கம் பெற்றன. பாறைகளும் மலைகளும் இயல்பாக இருக்கும் இடங்களைத்தேடிச் சென்று, கோயில்கள் அமைப்பதை விடுத்து, பாறைகளைச் சிறுசிறு கற்களாக உடைத்து, அவைகளை ஏற்றி வந்து ஏற்கனவே மரம், செங்கலால் உருவாகி ஊர்ப்புறத்தே வழிபாட்டுத் திருத்தலங்களாக வடிவங் கொண்டுள்ள கோயில்கள் கற்கோயில்களாக மாற்றி அமைக்கப் பெற்றன. கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பெற்ற இக் கோயில்களைக் 'கற்றளி' எனமக்கள் அழைத்

**கோயில் படிமுறை வளர்ச்சி**

தனர். தளி என்றால் கோயில். கல் + தளி கற்றளி ஆயிற்று. இத்தகைய கற்றளிக் கோயில்கள் பல தமிழகத்தில் ஊர்தோறும் உருவாகி நிற்பதை இப்போது கண்டு மகிழ் கிறோம்.

திருத்தளி என்றால் திருக்கோயில் எனப் பொருள் பெறும் அல்லவா? தமிழகம் எங்கு முள்ள கோயில்கள் அனைத்தையும் திருத் தளிகள் என்றே குறிப்பிடலாம். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள வேறு எந்தத் திருக் கோயிலும் திருத்தளி என அழைக்கப்பெறு வதில்லை! திருப்புத்தூரில் அமைந்துள்ள திருக்கோயில் மட்டுமே 'திருத்தளி' எனக் குறிப்பிடப் பெறுகிறது! தமிழ்நாட்டிலுள்ள சில திருக்கோயில்களை இலக்கியங்கள் திருத்தளி எனக் குறிப்பிட்டுக் கூறினும், வழக்கில் மக்களின் வார்த்தையில் அவைகள் திருத்தளி என வழங்கப் பெறுவது மில்லை! சொல்லப் பெறுவதும் இல்லை! திருப்புத்தூர் திருக்கோயில், இலக்கியங்களில் மட்டுமின்றி இயல்பாக மக்களின் பேச்சு வழக்கிலும் திருத் தளி என்றே கூறப்பட்டு வருகிறது. மூர்த்தி, தீர்த்தம் தலம் ஆகிய மூன்றுமே திருத்தளி யோடு இணைத்துச் சிறப்பித்துக் கூறப் பெறு கின்றன! ஆம்! மூர்த்தியின் திருநாமம் திருத் தளிநாதர்! தீர்த்தத்தின் திருப்பெயர் ஸ்ரீதளி! தலக்கோயிலோ திருத்தளி, என விளக்கம் பெற்றுள்ளது! ஆக, திருப்புத்தூர் ஆலயத் திற்கே சொந்தமாகியுள்ள 'திருத்தளி' எனும் பொருளார்ந்த சொல்லாட்சிக்குள்ளே ஏதோ ஒரு வரலாற்றுச் செய்தி புதைந்து கிடப்பது போல் தோன்றுகிறதல்லவா?

திருத்தளிச் சிறப்பு

திருத்தளிநாதர் கோயில் கருவறையின் வடக்கில் உள்ள கல்வெட்டு, இங்கேயுள்ள

நூற்றுக்கணக்கான கல்வெட்டுகளில் பழைமையானதாகக் கருதப்பெறுகிறது.

பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் ஆட்சிக் காலத்தில் பொறிக்கப் பெற்றதாகக் கருதப்பெறுகிற இக்கல்வெட்டில் இத்திருக்கோயில் "திருப்புத்தூர் திருக்கற்றளி" எனக் குறிப்பிடப் பெறுகிறது. இரண்டாம் வரகுண பாண்டியனின் ஆட்சிக்காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டெனக் கணிக்கப் பெற்றுள்ளது.

எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னமேயே கற்றளி

எனவே, இத்திருக்கோயில் எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னமேயே கற்றளியாக எடுக்கப் பெற்றுள்ளதென அறிகின்றோம். வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இரண்டு, தனிக்கற்களில் இங்குள்ளன. அவைகளில் "ஸ்ரீதளி" "திருத்தளி" என்றும் இத்திருக்கோயில் குறிப்பிடப் பெறுகின்றது.

தனிக்குன்றுகளை உரிய வகையில் வெட்டி எடுத்துச் செம்மை செய்து ஒற்றைக் கற்கோயில்களாகவும், பின் பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்களாகவும் உருவாக்கி, அடுத்தவளர்ச்சிப் படியாகக்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, கற்றளிகளை வடிவம் கொள்ளச் செய்தனர் நம் முன்னோர். இந்த வகையில் திருக்கோயில்களை உருவாக்கி நிலைபேறுடைய புகழினைப் பெற்றுள்ள பாண்டிய மன்னர்களும், பல்லவ வேந்தர்களும் சோழஅரசர்களும்என்றென்றும் தமிழர் உள்ளத்தில் வீற்றிருப்பர்!

திருக்கற்றளி

பல்லவர் காலக் கட்டிடக் கோயில்களில் (கற்றளிகள்) மிகவும் தொன்மையாக எஞ்சியுள்ளது காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்ற இடத்தில் உள்ளதாகும்.

மண்ணால்உருவாக்கியதை 'மண்தளி' என்றும் கல்லில் உருவாக்கியதை 'கற்றளி' என்றும் அழைப்பதுதான் வழக்கமாக இருந்து வந்துள்ளது. திருப்புத்தூர் கற்றளிக்குச் சிறப்புக்குரிய 'திரு' அடைமொழி ஆகியுள்ளது. 'திரு' சேர்ப்பதற்கு ஏதாவதொரு சிறப்பு இருக்க வேண்டுமல்லவா? 'திருக்கற்றளி' மருவி 'திருத்தளி'யாகிப் பின் வடமொழியில் 'ஸ்ரீதளி' ஆகியுள்ளதையும் அறிகிறோம்.

பல்லவர்களுடைய கற்றளிகளிலேயே மிகவும் உன்னதச் சிறப்பும் எழிலும் கொண்டது காஞ்சி கைலாசநாகர் ஆலயமும். அன்று கட்டப்பெற்ற கற்கோயில்களில் மிகவும்பெரிய ஆலயமும் இதுதான். எனவே இதற்குப் ''பெரிய கற்றளி'' என்ற பெயருண்டு. காலத்தைக் கருத்தில் கொண்டு, எண்ணிப்பார்க்கின்றபோது, பாண்டியர்கள் உருவாக்கிய கற்றளிகளிலேயேதிருப்புத்தூர் கற்றளி முதன் முதலாக உருவாக்கம் பெற்றிருக்க வேண்டும். எனவே முதன்மைச் சிறப்புக்கருதி இதனைத் ''திருக்கற்றளி'' எனப் போற்றியிருக்க வேண்டும். 'திருக்கற்றளி', வழக்கில் 'திருத்தளி' எனப் புகழ்பெற்றிருந்ததால் அப்பர் சுவாமிகள் ''திருப்புத்தூர் திருத்தளியான் காண்; அவன் என் சிந்தையானே!'' எனப் போற்றிப்பாடி, தமது திருப்பதிகத்தில் திருவருள் வேண்டியுள்ளார்.

திருக்கற்றளி திருத்தளியானது

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஞானச்செல்வர் சம்பந்தப் பெருமானும், அருட்செல்வர்அப்பர் சுவாமிகளும் வருகை தருவதற்கு முன்னமேயே திருப்புத்தூர் திருத்தளி புகழ் ஓங்கிய திருக்கோயிலாய் தமிழகமெங்கும் விளக்கம் பெற்றிருந்திருக்கிறது. எனவேதான் சம்பந்தப்பெருமான் தமது திருப்பதிகத் திருப் பாடல் ஒன்றில் திருப்புத்தூர் திருத்தளியை

"ஓங்கு கோயில்" எனக் குறிப்பிட்டுள்ளார். கட்டட அமைப்பைக் கருத்தில் கொண்டு, திருக்கோயில்கள் பலவாறு பெயர் பெற்றிருந்தன. இதனை ஒரு திருப்பாடலில் உணர்த்துகின்றபோது, அருட்செல்வர் அப்பர் சுவாமிகள் 'பெருங்கோயில்' 'கரக்கோயில்' 'ஞாழற்கோயில்' 'கொகுடிக்கோயில்' 'இளங்கோயில்' 'மணிக்கோயில்' 'ஆலக்கோயில்' எனப் பல்வேறு கோயில்களைக் கூறி, நிறைவாகத் 'திருக்கோயில்' என ஒரு வகை ஆலயத்தைக் குறிப்பிட்டுள்ளார். திருப்புத்தூரில் உருவாக்கம் பெற்றுள்ள திருத்தளி போலத் 'தனித்தன்மை' மிக்கக் கோயில்களையே சுவாமிகள் 'திருக்கோயில்' எனக் குறிப்பிட்டுள்ளதாக எண்ணிப் பார்ப்பதிலும் ஏதும் தவறில்லைதானே?

ஓங்கு கோயில்

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கர கோயில் கடிபொழிற் சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"

'திருக்கோயில்' எனப்பாடல்களில் தனியாகக் குறிப்பிடுகிறபோது, அது பொதுத் தன்மையையே பொருளாகக் கொண்டு நிற்கும். இங்கே சுவாமிகள், கோயில்களின் வகைகளை வரிசையாகக் குறிப்பிட்டு வருகிறபோது, திருக்கோயில் எனக் கூறுவதால் கோயில் வகைகளில் இதுவும் ஒன்று எனக் கொள்வதுதானே பொருத்தமாக இருக்கும்? தனித்தன்மையும், தனிச்சிறப்புங் கொண்ட புகழ் ஓங்கு கோயில் 'திருக்கோயில்' என வகைப்படுத்தப் பெறுமென்பதைச் சுவாமி

திருத்தளியும் திருக்கோயிலும்

களின் திருவாக்குப்புலப்படுத்துகிறது.எனவே தான் திருப்புத்தூர் திருத்தளி — 'திருக்கோயில்'வகையைச்சார்ந்து, 'ஓங்குகோயில்' என, உயர் தமிழ்த்தலைவர் ஞானசம்பந்தப் பெருமானால் உரைத்துப் போற்றப்பெற்றது.

திருப்புத்தூர் திருத்தளிக் கருவறை மட்டுமின்றி, விமானமும் கல்லால் உருவாகியுள்ள கவின் மிகு அமைப்புக் கருதிப் பார்க்கத் தக்கது. அத்துடன் மூன்று தளங்களைக் கொண்ட இந்த விமானத்தின் கிரீவமும், சிகரமும் சதுரவடிவமான நாகர அமைப்புப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டுக் கோயில்களில் அதிகம் இடம் பெற்றிராத நாகர அமைப்பு இங்கே கையாளப்பட்டிருக்கும் சிறப்புத் தன்மை சிந்தனைக்குரியது!

பாரத நாட்டுக் கட்டடக் கலையை மூன்று பெரும் பிரிவாகச் சொல்கின்றனர். அவை: நாகரம், வேசரம், திராவிடம். அடி முதல்முடி வரையில் நான்கு பட்டையாகச் சதுரமாக அமைக்கும்கலைப்பாணி, நருமதை ஆற்றுக்கு வடக்கே, வட பாரதத்தில் பிரபலமானது. இதனை 'நாகரம்' எனக் கூறுகின்றனர். வட்டவடிவமாக அல்லது நீண்ட அரைவட்ட வடிவமாகத் தரை, உடல்விமான அமைப்புகளை உருவாக்கும் கலைப்பாணி 'வேசரம்' என அழைக்கப் பெறுகிறது. வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் பின்பற்றப் பெற்ற கலைப்பாணியைத் 'திராவிடம்' எனக் குறிப்பிடுகின்றனர்.

கலைப் பாணிகள்

இம் மூன்றுவிதமான கலைப்பாணிகளும் திருப்புத்தூர்திருக்கோயிலில் இடம்பெற்றுள்ள அருமை, திருத்தளியின் தனித்தன்மைக்கு மற்றொரு சிறப்பாகத் திகழ்கிறது.

திருக்கோயில் உருவாவதற்கு முன்னமேயே, திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள சிவ பரம் பொருளான மூர்த்திக்கு, சீரிய திருநாமம் ஒன்று இருந்திருக்க வேண்டும். திருப்புத்தூர் புராணத்தில்'பிரமதேசப்பிரியன்''நவபுரீசன்' 'கௌரீசன்''பிருகுபூசிதன்''சிவமறையோன்' 'பராபரன்' முதலிய பல திருநாமங்கள் பேசப் பெறுகின்றன. கல்வெட்டுகளிலோ 'திருக் கற்றளிப் படாரர்' என்றும் 'திருத்தளி மகா தேவர்' என்றும், 'திருத்தளி உடைய பரமே சுவரர்' என்றும், 'திருத்தளியாண்ட நாயனார்'என்றும் பெருமானின் பெரும்பெயர் பொறிக்கப்பெற்றுள்ளது. எழுந்தருளியுள்ள கடவுளரைக் கொண்டே உருவாகியுள்ள திருக்கோயில் அழைக்கப்பெறுவது இயல்பு. இத்தகைய இயல்புதான் தமிழகத்தின் பெரும் பான்மையான திருக்கோயில்களில் வழக்க மாக இருந்து வருகின்றது. 'செந்திலாண்ட வன் திருக்கோயில்' 'மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்' 'உச்சிப்பிள்ளையார்கோயில்' 'பிரகதீஸ்வரர் ஆலயம்' 'கொப்புடையாள் திருக்கோயில்' 'வீரமாகாளியம்மன் திருக் கோயில்' என்றெல்லாம் வழங்கப் பெறுவதை அறிகின்றோம். திருப்புத்தூரில் கோயிலை வைத்துக் குடிகொண்டு அருள்பாலிக்கும் பரம்பொருளின் திருநாமம் குறிப்பிடப் பெறுகின்றது. கோயில் 'திருத்தளி' எனப் பேசப் பெற்று, வீற்றிருக்கும் மூர்த்தி 'திருத் தளிநாதர்' 'திருத்தளியான்' என அழைக்கப் பெற்றுள்ளார். இத்தகைய இயல்பு மாற்றமும் திருப்புத்தூர் திருத்தளிக்குத் தனித்தன்மை யானதோர் ஏற்றம் அளித்திருப்பதைத் தெளி வாக உணரமுடிகிறது. திருப்புத்தூரில் தெளியத் தெரியும் ஆதிசிவனின்முகவிலாசம் திருத்தளியின் புகழ் விலாசமாய்க் கட்டியம் கூறி நிற்பது நம் கவனத்தைக் கவர்கிற தல்லவா?

**திருத்தளியின் தனித்தன்மை**

காணவும், கருதவும் இயலாத முழுமுதற் பெருங்கடவுளைக் காணவும்,கருதவும் செய்ய எளிமையாக்கி, திருவுருவத் திருமேனி கொண்டு வணங்கி மகிழும் முறையைத் 'திருவுருவ வழிபாடு' எனக் கொண்டுள் ளோம். அருட்பெருங்கடலாகிய பரம்பொருள் தன்னை உயிர்கள் உணர்ந்து வழிபட்டு உய்யும் பொருட்டு, ஒரு சில காலங்களில் ஒரு சில இடங்களில், மெய்யன்புடைய மேன் மக் களின் வழிபாட்டிற்கெனத் தன்னை வெளிப் படுத்திக் கருணை செய்கிறது. விறகினுள் மறைந்திருக்கும் நெருப்புப் போலவும், பாலி னுள் நிறைந்திருக்கும் நெய் போலவும், மறைய நிற்கும் மாமணிச் சோதியாகிய இறைவன், அன்புறவு எனும் கோல் நட்டு ஆழ்ந்த பக்தி உணர்வெனும் கயிற்றால் கடைகின்ற போது காட்சிக்குப் புலப்படு மென்பது நமது அருளாளர்களின் அனுபவம். அத்தகைய அருள் அனுபவத்தினால்

திருவுருவ வழிபாடு

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே!"

எனப்பாடி அருளியுள்ளனர்.

விறகினை ஒன்றோடொன்று உராய்ந்து தேய்க்கின்ற போது வெளிப்படும் தீயினைப் போல, பாலினைக் காய்ச்சிக் கடைகின்ற போது வெளிப்படும் வெண்ணெய் போல, உறவுக் கோல்நட்டு, உணர்வுக் கயிற்றினால் மெய்யன்போடு நினைந்து, நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகிக் கடைந்திட இறைவன் தோன்றுவான். அப்படித் தோன் றிய பரம்பொருள்தான் திருப்புத்தூர் திருத்த ளியின்கண் எழுந்தருளிய சிவபரம்பொருள்! எக்காலத்துத் தோன்றியதென எவரும் கூற

சிற்றறிவு போக்கிச் சிவ அறிவு பெற்றுய்ய

இயலாத வகையில் திருத்தளியின் கருவறையில் சுயம்புலிங்கமாய்த் தோற்றம் தந்து, திருவருள் பாலித்து வருகின்றது. அன்பு கனிய, அழுது தொழுவோர்க்குச் சிற்றறிவுத் தன்மை போக்கிச் சிவ அறிவு பெற்றுத் தருகின்றது!

"ஓங்கு கோயில் உறைவார்" என ஞானசம்பந்தப் பெருமானும், "திருத்தளியான்" என அப்பர் சுவாமிகளும் போற்றிப் பரவியுள்ள திருப்புத்தூர் திருத்தளியின் மூல மூர்த்தி தோற்றுவிக்கப் பட்டவரல்ல! தாமே தோன்றியவர்! 'கொன்றை வனம்' எனக் கூறப் பெறும் புத்தூரில்தான்தோன்றியாய்ப் பேரிலிங்கமாய் எழுந்து, பின் கிளைத்து வடகிழக்கில் ஒரு சிவமூர்த்தமாய், மேற்கே ஒரு சிவமூர்த்தமாய் அமைந்து, திருத்தளியின் திருச்சுற்றில் எட்டு லிங்கங்களாய் விளங்கி, இறைவியின் 'அஷ்டலிங்கப் பூஜை'க்குக் களம் அமைத்து வழங்கியருளியதாய் மூலவர் சிறப்பித்து கூறப்பெறுகிறார். பெருமையுறு திருத்தளியில் பேரொளியாய்த் தழைத்து நிற்கும் பெருமான், ஒருமையோடு உள் கனிந்து வணங்குவோர்க்கு உயரிய வாழ்வளிக்கின்றான். உத்தமராய் விளங்க வைக்கின்றான். அவலங்கள் நீக்கி, ஆனந்த வாழ்வளிக்கும் சிவமூர்த்தம் இது. சிந்தையுள் கொள்வோம்.

தான்தோன்றிய தண்ணருள் மூர்த்தம்

பூப்பதுவாய்க்காப்பதுவாய்ப்போக்குவதாய்த் தேக்குவதாய், நீர்ப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவதாய் விளங்கும் அம்மைக்குத் தனிக் கோட்டமோ, தனிச் சந்நிதியோ அமைத்து வழிபடும் மரபு, பண்டைக் காலத்தில் கொண்டிராத ஒன்று. அம்மையின் மூர்த்தம் முதன் முதலில், முதற் குலோத்துங்கன் காலத்தில் தான் அமைக்கப் பெற்றதாக வரலாற்று அறிஞர் கருதுகின்றனர். திருப்புத்தூர் திருத்தளியில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகள் திருத்தளியின் இடது புறத்தில் தனிக்

கோட்டமும், தனிச் சந்நிதியும் அம்மைக்கு அமைக்கப் பெற்றதாகக் காட்டுகின்றன. 'திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார்' 'திருப்பள்ளியறை நாச்சியார்' எனக்கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ள அம்மைக்கு கி.பி. டன்னிரண்டாம் நூற்றாண்டில் தனி மூர்த்தம் அமைக்கப் பெற்றதாக அறிகின்றோம். விஜய நகர மன்னர் அச்சுத தேவராயரின் காலத்தில் அம்மை 'சிவகாமசுந்தரி' என அழைக்கப் பெற்றிருக்கிறாள். பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சிவகாமசுந்தரி எனும் திருநாமம், அம்மைக்கு இப்போதும் விளங்கி வருகின்றது. திருப்புத்தூர் திருத்தளியில் திகழ்கின்ற சக்திச் செழுஞ்சுடரை, சிவகாம சுந்தரியைப் புகழ்கின்றோர் வாழ்வில் நிகழ்கின்ற அற்புதங்கள் நினைக்கத் தக்கவை; நெஞ்சில் நிறுத்தி வணங்கத் தூண்டுபவை!

அம்மை மூர்த்தம்

அருணகிரிப் பெருமானின் அருட்பாடல் பெற்ற முருகப் பெருமான், வள்ளி தெய்வானையுடன் திருத்தளியின் இரண்டாம் திருச்சுற்றில் வடக்குப் பார்த்து, சுப்பிரமணிய சுவாமி' எனும் திருநாமத்துடன் திகழ்கிறார். ''திருப்புத்தூரில்மருவியுறைதருபெருமானே'' என்றும், ''தீர்த்த திருப்புத் தூருறை பெருமாளே!'' என்றும், அருணகிரிப் பெருமான் அன்போடும் அருந்தமிழ்ப் பாட்டோடும் வழிபட்ட சுப்பிரமணிய சுவாமி, குமிண் சிரிப்புடன் அன்பர்களின் குறை நீக்கத் தேவியருடன் திகழும் திருக்காட்சி கண்டுகளிக்கத் தக்கது. அன்பு மலர் கொண்டு துதித்து, அரிய பேற்றினை அடையத் தக்க மூர்த்தம் இது.

சுப்பிரமணியர் சந்நிதி

நித்தியமாய்ச் சத்தியமாய்த் தத்துவமாய் நின்றாடும் 'கௌரி தாண்டவ மூர்த்தி' எனப்

பெயர் பெற்ற, ஆடல் வல்லான் நடராஜப் பெருமானின் திருமூர்த்தம் முதல் திருச்சுற் றின் வடகிழக்கு மூலையில், எழிலார்ந்த மண்டப அமைப்பில் ஏற்றம் பெற்றுள்ளது. கல்வெட்டில் பெருமான் 'கூத்தாடுந்தேவர்' எனக்குறிப்பிடப்படுகிறார். பத்துக் கரங்களு டன் சூலம், உடுக்கை, அம்பு, கத்தி, மழு, கஜஹஸ்தம், வில், கேடயம், அங்குசம் ஆகி யவை தாங்கி, இடது காலை வீசி, முயலகன் மீது வலது காலை ஊன்றி நின்றாடும் திருக் கோலம், அப்பப்பா, காணக் கண் கோடி வேண்டும்! அம்மை இடப்புறம் நின்று, பெருமானின் ஆடல் வண்ணம் கண்டுவக்கும் திருமுகப் பொலிவு, அம்மம்மா, தரிசிக்கப் பெருந்தவம் செய்திருக்க வேண்டும்! வலப் புறத்தில் நந்தி, மத்தளம் வாசிக்கின்றார். இளமுறுவல் காட்டித் தென்திசை நோக்கித் தெய்வ நடம் செய்யும் ஆடல்வல்லானின் உடுக்கையில் சிகரமும், வீசிய கரத்தில் வக ரமும், அபய கரத்தில் யகரமும், அகலில் நக ரமும், ஊன்றிய திருவடியின்கண் மகரமும் கொண்டு, ஓங்காரத் திருவாசியின் நடுவில் நிறை சுடராக ஒளிரும் பெருமானின் திருநட னம் அம்மைக்கு மகிழ்வூட்டியது. அப்பனை யும், அம்மையையும் ஒருசேரத் தரிசித்துப் பயன்பெறும் பேறு நமக்குக் கிட்டியுள்ளது.

ஆடவல்லான் அருள் மூர்த்தம்

திருத்தளிநாதர் திருக்கோயிலை 'வயிரவன் கோயில்' என அழைக்கும் வழக்கம் மக்க ளிடையே பழக்கமாகி உள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள திருப்புத்தூர் வரை படத்தில், திருத்தளி, வயிரவன் கோயில் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது. திருத்தளியில் இரண்டாம் திருச்சுற்றின் வடக்கில் அமைந்துள்ள மேற்கு நோக்கிய கோயிலில் பைரவர் எழுந்தருளி அருள்

பாவித்து வருகின்றனர். இரண்டு திருவடிகளையும் பிணைத்து, முழந்தாளை ஒடுக்கிப் பாதங்கள் நிலத்தில் பதியாது உடம்புள் அடங்கவைத்து, இரு கோரைப் பற்கள் விளங்கப் புன்முறுவலுடன் யோகமூர்த்தியாய்ப் பைரவ மூர்த்தி வீற்றிருக்கின்றார். மார்பை முப்பிரிநூலும், முத்துமாலையும் அலங்கரிக்க, இடது கரத்தைத் தொடையில் கொண்டு, வலது கரத்தில் இடி தரித்து யோக நிஷ்டையில் மேற்கு நோக்கி அமர்ந்துள்ள பைரவர் சூலாயுதத்தையும் ஏந்தியுள்ளார். எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் இத்திருக்கோயிலில் பைரவர் வழிபாடு தோன்றியிருக்க வேண்டுமென ஆராய்வு அறிஞர் கருத்துத் தெரிவித்து உள்ளனர். பைரவர் பற்றிய கல்வெட்டுகள் கி.பி 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக உள்ளன. கல்வெட்டுகளில் பைரவர் 'ஆண்டபிள்ளையார்' எனக் குறிப்பிடப் பெறுகிறார்.

ஆண்ட
பிள்ளையார்
பைரவர்

யோகமூர்த்தியாகிய பைரவர் அருட்சக்தி மிகுந்தவராகக் கருதப்பட்டு வருகின்றார். எண்ணியவை கைகூடும்; இழப்புகள் மேவி வரும்; இருமல், கக்குவான் போன்ற நோய்கள் குழந்தைகளுக்கு வந்தால், பைரவரை வேண்ட நோய் பளிச்சென நீங்கிவிடும்; மலட்டுத் தன்மை நீங்கி, மகப்பேறு வந்து சேரும்... என்றெல்லாம் நம்பிக்கையோடுவழிபடும் மக்களுக்குநலமும் பலமும்கூட்டுவிக்கும் பைரவர் சந்நிதி—திருவருள் கொழிக்கும், பெருநலம் அளிக்கும் புகழார்ந்த மூர்த்தமாகத் திகழ்ந்து வருகின்றது.

திருவருள்
கொழிக்கும்
சந்நிதி

பைரவர் சந்நிதிக்குப் பின்புறத்தில் கிழக்கு நோக்கி எழுந்தருளி உள்ளார் நாகேஸ்வரர். அம்பிகை கௌரி இங்கு வருகை தந்தபோது

வாசுகியும் கார்கோடனும் உடன் வந்ததாக வும், அவர்கள் வணங்குவதற்காக உருவாக் கம் செய்து வழிபட்ட மூர்த்தியே 'நாகேஸ் வரர்' என அழைக்கப்பெறுவதாகப் புராணங் கள் கூறுகின்றன.

நலமளிக்கும் நாகேஸ்வரர்

பைரவர் வழிபாடுதொடங்கிய காலத்திலேயே நாகேஸ்வரர் மூர்த்தம் ஏற்பட்டிருக்கலாமென ஒரு கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது. ஸ்ரீகைலாய முடையான் என்பவன் அருவி யூரானகுலசேகரபட்டணத்தைச்சேர்ந்தவன். இவன் ஒரு பாணலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, பாணலிங்க நாயனார் சந்நிதி முன் பாக இரண்டு நொந்தா விளக்குகள் எரிக்கப் பொருள் வழங்கிப் பெருமை பெற்றானென்ற செய்தி ஒரு கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. பைரவர் சந்நிதிக்குக் கிழக்கில் உள்ள நாகேஸ்வரர்தான் பாணலிங்க நாயனாராக இருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர் ஆய் வறிஞர். செய்தி தெளிவாக்கிய கல்வெட்டு கி. பி. 13 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்ததெனச் சொல்லப் பெறுகின்றது. நாகேஸ்வரர் திரு மூர்த்தம நலமளிக்கும் அருள் மூர்த்தமாக விளங்கி வருகின்றது.

பெருமாள் சந்நிதி

மாயனை, வடமதுரை மைந்தனை, தூய பெருநீர் யமுனைத் துறைவனை, ஆயர் குலத்தினில் தோன்றிய அணி விளக்கை திருமாலைச் சேவிக்கத் தக்க திருமூர்த்தம் திருத்தளிநாதரின் கருவறைக்கு வடபுறத்துத் திருச்சுற்று மாளிகையின் ஒரு புறத்தே அமைந்துள்ளது! இருபுறத்தும் பூதேவியும் முனிவரும் வீற்றிருக்கத் திருமால் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். 'சௌமிய நாராயணப் பெருமாள்' எனும் ஸ்ரீகொன்றை யோக நாராயணப் பெருமாள் மென்முறுவல் காட்டி கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளார்.

நான்கு கரங்களுடன் ஜடாமகுடம் தரித்துக் காட்சியளிக்கிறார். கண்ணனைக் கார்மேக வண்ணனைத் தரிசித்து மகிழும் பாங்குடன் கதை ஏந்திய முனிவர் காணப்படுகிறார், பூதேவியோ கூப்பிய கரங்களுடன் திருமாலைக் கண்டு சேவிக்கும் பூரிப்பில், தெற்கு நோக்கி அமர்த்துள்ளார்.

சிவ பரம்பொருள் எழுந்தருளியுள்ள திருத் தளியில். திருமால் வீற்றிருந்து அருள் நலம் கூட்டும் அற்புதம் எண்ணிப்பார்க்கத்தக்கது. சமயக் காழ்ப்பின்றி, சரிசம மனப்பான்மை பண்டைக் காலத்திலேயே கடைப்பிடிக்கப் பெற்ற மேன்மை, தெரிய வருகிறது திருமால் பூதேவி, முனிவர் ஆகிய மூன்று திருமேனி களும் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வையாக இருக்கலாமென்பது ஆய்வாளர் கருத்து. எனவே இத்திருமூர்த்தம் திருத்தளி யில் மிகு பழைமை கொண்டது. பைந்தமிழ் பின் சென்ற பச்சைமால் திருமூர்த்தம், அண் மையில் பாங்குறத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

சமயக் காழ்ப்பின்றி சரிசம மனப்பான்மை

முதல் திருச்சுற்றின் தெற்கிலுள்ள தேவ கோஷ்டத்தின் முன்பாகத் தட்சணா மூர்த்தி காட்சி தருகின்றார். முன்பு கோமுகத்திற்கு அருகிலிருந்த துர்க்கையை, சற்று தெற்கில் தள்ளி வைத்துத் தனி ஆலயமாக அண்மைக் காலத்தில் அமைத்துள்ளனர். வடமேற்கு மூலையில் அருள் பாலிக்க அகத்தியலிங்கர் இடம் பெற்றுள்ளார். வடக்கில் சண்டிகேசுவ ரர் காட்சி அளிக்கிறார்.

கருவறையின் தெற்கில், திருச்சுற்று மாளிகை யில் சப்தமாதர்களும் அதையடுத்து ஜேஷ்டா தேவியின் திருவுருவமும் உள்ளன. சப்த மாதர்களுக்கு முன்னும் பின்னும் வீணாதரர்,

சப்தமாதர்

வியாயகர் இடம் பெற்றுள்ளனர். அபிராமி, மகேஸ்வரி, இந்திராணி, வைஷ்ணவி, வராகி, கௌமாரி, சாமுண்டா என சப்தமாதர் வரிசைப் படுத்தி வைக்கப் பெற்றுள்ளனர். மாதர்கள் அனைவரும் மார்புக் கச்சு அணிந்துள்ளனர். இடது காலை மடித்து வலது காலை தொங்க விட்டு அமர்ந்துள்ளனர்.

கருவறைக்கு வடக்கிலுள்ள திருச்சுற்று மாளிகையில் விநாயகர், மிழலை ஈசர், திருமறைக் காட்டு ஈசர் ஆகியோர் காட்சி தருகின்றனர். முதல் திருச்சுற்றின் வாயிலையும், இரண்டாம் திருச்சுற்றின் வாயிலையும் இணைக்கும் மண்டபத்தில் நவகிரகங்கள் இடம் பெற்றுள்ளன.

## 4. திருவருள் மூர்த்தம் ஒன்றில் கௌரிதாண்டவச் சிறப்பு

ஆடல்வல்லானாகிய நடராஜப்பெருமான் திருமுகத்தில் அபிஷேகம் செய்தால், அந்நீர் மூக்கு நுனி வழியாக வழிந்து, கரிகரத்தின் விரல் நுனி வழியாகத் தூக்கிய திருவடியின் விரல் நுனி வழியே கீழே சொட்டுமானால், அத்திருவுருவம் சிறந்த அமைப்புடன் கூடியதெனச் சிற்பக்கலை வல்லுநர் செப்புவர். இத்தகைய ஆனந்தத் தாண்டவத் திருமேனி கலையழகு செறிந்தவை; சில தலங்களில் உள்ளவை. சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள திருவுருவே எல்லாவற்றிற்கும் மேலான கலைப் பேரழகாய்த் திகழ்கிறது.

கூத்தப்பெருமான்

நடராஜப் பெருமானின் திருவுருவ அமைப்பு புராண ஆசிரியர்களின் புதிய படைப்பும் அல்ல! சிற்பிகளின் சீரிய சிந்தனைகளில் தோன்றிய உருவாக்கக் கலைப் பிறப்பும் அல்ல! உயிர்கள் மீது கொண்ட பெருங்கருணையினாலே உலகுஉய்ய, தாமேஇறைவன்

கொண்ட கூத்துருவம் கூத்தன் திருவுருவமா யிற்று! பெருமானின் திருவுருவப் பெருஞ் சிறப்பை, முதன் முதலாகக் கண்டு, நமக்கு உணர்த்தியவர் திருமூலர் ஆவார்.

பெருமானின் திருவடிகள் நம்மைப் போல நடக்கத் தோன்றியவையும் அல்ல; நல்லன கெட்டனபார்த்து மிதிக்கத்தோன்றியவையும் அல்ல! அவை மறைப்பாற்றல், அருளாற்றல் கொண்டவை! யான் எனது என்னும் இரு வகைப் பற்றையும் நீக்குவது ஊன்றிய திரு வடி! பற்றுவிட்டுப் பற்றற்றான் திருவருளைப் பற்றிய உயிர்களை பேரின்ப நிலையில் இருத் துவது தூக்கிய திருவடி! கண் ஒளிப்பொருள். ஒளியின்றிப் பொருளுணர்ச்சியும் இல்லை; அறிவுணர்ச்சியும் இல்லை. உணர்ச்சி ஊட்ட வல்ல புறச்சோதிகளாகிய சூரியன், சந்திரன், தீ ஆகிய முச்சுடர்களை முக்கண்களாகக் கொண்டவன் இறைவன். கூத்தப் பெருமா னின் திருமேனி அமைப்பில், முகத்தோற்றமே தனிச்சிறப்புடையது அதிலும் 'குமிண்சிரிப்பு' என அப்பர்சுவாமிகளால் அனுபவிக்கப்பெற்ற புன்முறுவலின் அழகும், பொருளும் பெருஞ் சிறப்பிற்குரியவை. அந்தப் புன்முறுவல் முப் புரங்களை அழித்து ஒழித்தது அல்லவா? உயிர்களின் மூன்று வினைகளையும் அழிக்க வல்லது. "நுண்சிகை ஞானமாம்" என்பது திருமந்திரம். எனவே இறைவனின் முடிச் ச்சடையும், பரந்த சடையும் உயிர்களுக்கு ஞானத்தை வழங்குவன. வினை கெடுத்து உயர்வளிக்கும் குறிப்பை உணர்த்துவது பிறை. எல்லையற்ற பேராற்றலை எடுத்தியம் புகிறது கங்கை. திருமுடியில் அணிந்திருக்கும் ஊமத்தம் பூ, எருக்கு, அறுகு முதலியவை முறையே விருப்பு வெறுப்பற்ற தன்மை, விளக்கம், நுணுக்கம் ஆகியவற்றை வெளிப் படுத்துபவை திருமேனியில் தரித்திருக்கும்

மெய்ப்பொருள் உணர்த்தும் திருமேனி

திருவெண்ணீறு, அநாதி நித்திய நிலைபேற்றுத் தன்மையை உணர்த்துகின்றது. திருச்செவிகள் பிரணவ வடிவானவை.

வலக்காதில் குழையும், இடக்காதில் தோடும் ஆணொடு பெண்ணாய் அமைந்த வையகம் 'தன்னுரு' 'தன் வடிவு' என்பதனை உணர்த்தும் திருக்குறிப்புகள்.

நூலது வேதாந்தம்

நீலகண்டம் இறைவனது திருவருள்' ஆற்றலை விளக்குவது. இறைவனுடைய திருமார்பில் குறுக்காக உந்திவரை தொங்கும் பூணூல் வேதத்தின் முடியாகிய பிரணவகாயத்ரியைக் குறிக்கிறது. 'நூலது வேதாந்தம்' எனப்பேசுகிறது திருமந்திரம். திருவடிகளுக்கு எழிலூட்டும் சிலம்பும் கழலும்வேதமாகவும், பிறப்பறுக்கும் விழைவாகவும் விளங்குகின்றன.

திருக்கரங்கள் அருட்செல்வங்கள்

திருக்கரங்கள் பற்றியுள்ள கருவிகள் ஒவ்வொன்றும் அருட்செயல்களை விளக்க வந்த திருக்குறிப்புகளாய் விளங்குகின்றன. வலக்கரங்களில் ஒன்று அபயம் அளிப்பதாய் அமைந்தும், இடக்கரங்களில் ஒன்று தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டி, பக்குவப்பட்ட ஆன்மாக்களை 'இதுதான் நீ அடையக்கூடிய இன்பமயமான திருவிடம்' எனக்குறிப்புணர்த்துகின்றது. முயலகன் ஆணவ மலத்தின் அடையாளம். அதனை ஒடுக்க இறைவனாலன்றி ஆன்மாக்களால் இயலாது. அதனால் ஊன்றிய திருவடி உயிர்கள் வீடுபேறு பெறும் தத்துவத்தை உணர்த்துகின்றது.

'ஓங்காரமே நல் திருவாசி' என்பது ஓர் உண்மைவிளக்கம். ஆடல்வல்லான் நடராஜப் பெருமானின் திருவுருவம் திரு ஐந்தெழுத்தின் பெருங்கலை வடிவம். எனவே பிரணவமாகிய வித்தெழுத்தின்றி திருவைந்தெழுத்தினை

ஒலிப்பது கூடாதென்பதை உணர்த்தவே, ஓங்காரத் திருவாசியின் இடையில் திருவைந் தெழுத்து வடிவம்கொண்டு கூத்தப்பெருமான் விளங்குகின்றார்.

இத்தகைய பொருளார்ந்த பொன் திருமேனி பெற்ற புனிதர், உயிர்கள் உய்யும் பொருட்டு 'எழுவகைத் தாண்டவம்' ஆடியதாகத் திருப்புத்தூர்ப் புராணம் தெரிவிக்கின்றது.

ஐந்தொழில் தாண்டவம்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலையும் ஒருசேரச் செயயும் தாண்டவம் 'ஆனந்த தாண்டவம்' எனக் கூறப்பெறுகின்றது. இதனை 'பஞ்ச கிருத்தியப் பரமானந்த தாண்டவம்' என்றும் வழங்குவர். ஐந்தொழிலையும் தனித்தனியாகச் செய்யும் தாண்டவங்கள் ஆறு தலங்களில் நிகழ்ந்ததாகத் திருப்புத்தூர் புராணம் கூறுகின்றது. ஆக எழுவகைத் தாண்டவங்களும் ஏழு வகையான இன்னிசைகளினின்றும் தோன்றியதாகவும், ஏழு திருத்தலங்களில் நிகழ்ந்ததாகவும் புராணக் கருத்துப் புலப்படுத்துகின்றது.

தாண்டவங்களும் திருத்தலங்களும்

படைத்தல் தொழிலை இயக்கக் 'காளிகா தாண்டவம்' திருநெல்வேலி தாம்பிர சபையிலும்; காத்தல் தொழிலை அருளத் திருப்புத்தூர் சிற்சபையில் 'கௌரி தாண்டவம்'; மதுரை வெள்ளியம்பலத்தில் 'சந்தியா தாண்டவம்'; அழித்தல் தொழில் நிகழ இருண்ட நள்ளிரவிலும்; மறைத்தல் தொழில் அமையத் 'திரிபுர தாண்டவம்' திருக்குற்றாலம் இரத்தின சபையிலும்; அருளல் தொழில் மேவ திருவாலங்காடு இரத்தின சபையில் 'ஊர்த்துவ தாண்டவம்'; ஐந்தொழிலும் ஒருசேர நிகழ்ந்திட 'ஆனந்த தாண்டவம்' தில்லை கனக சபையிலும் அமைந்ததாகப் புராணம்

எடுத்தியம்புகிறது. ஆக எழுவகைத் தாண்டவங்களில் ஒன்றான 'கௌரி தாண்டவம்' திருப்பத்தூர் சிற்சபையில் நிகழ்ந்ததாகத் தெளிவாகப் புராணம் உணர்த்துகின்றது.

ஆனந்த தாண்டவம்

எல்லா உயிர்களுக்கும் அதனதன் தகுதிக்கேற்ப ஆணவமல இருளைப்போக்கி. வினைகளை நுகர்வித்துப்பேரின்ப நிலையை எய்துவிக்கின்ற பெருங்களிப்பால் இறைவன் ஆடுகின்ற தாண்டவம்-ஆனந்த தாண்டவம். இத்தாண்டவம்- உலகம் படைக்கவும், காக்கவும்' பின்னர் ஒடுக்கவும், மறைக்கவும், அருளவும் பயன்படுகின்றது.

காளிகா தாண்டவம்

படைத்தல் தொழிலைக் குறிக்கும் காளிகா தாண்டவத்தில் முயலகன் குழந்தை போலக் கால்களைப் பரப்பி வைத்துக் கொண்டு, விழி பிதுங்காமல், மலர்ந்த முகத் தோற்றத்துடன் காணப் பெறுவது-ஆணவ மலம் இயங்கப்படுவதற்குத் தலைதூக்கியிருக்கிற தன்மையைக் குறிப்பதாய் உளளது.

சந்தியா தாண்டவம்

மாலைக் காலத்தில் இறைவன் மகிழ்ச்சியில் திளைத்து ஆடிய நடனம்-சந்தியா தாண்டவம். இது ஒரு வகை இன்ப நடனம். காத்தல் இதன்நோக்கம் மதுரை வெள்ளியம்பலத்தில் ஆடியதாகப் புராணம் பேசுகிறது. வெள்ளியம்பலத் திருநடனம் கால்மாறி ஆடிய ஆனந்த நடனம்.

சங்கார தாண்டவம்

அழித்தல் தொழிலை இயற்ற ஆடப்பெறும் தாண்டவம் சங்கார தாண்டவம். பிறவிச்சுழலில் ஓயாது உழலும் உயிர்களுக்கு ஓய்வளிக்கும் அருட்செயல், மகா சங்கார தாண்டவம் என்றும், ஊழிக் கூத்து என்றும் இது இருவகைப்படும். ஒவ்வோர் ஊழிக் காலத்தும் இறைவன் ஆடுவது ஊழிக்கூத்து. தன்னைத் தவிர எல்லாம் அழிந்து நிற்கும் பேரூழிக்

காலத்து, காண்பாரின்றித் தனியாய் ஆடும் பேரூழிக் கூத்தே மகா சங்கார தாண்டவம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

முப்புரம் எரித்த காலத்தில் இறைவன் வெற்றிக் களிப்போடு ஆடிய தாண்டவம்-திரிபுர தாண்டவம் எனக் குறிப்பிடப் பெருகின்றது. இத்தாண்டவத்தை இறைவன் ஆடிய போது அச்சம், வியப்பு, விழைவு, பொலிவு முதலிய மெய்ப்பாடுகள் தோன்றியதாகப் பேசப்பெறுகிறது.

திரிபுர தாண்டவம்

வலக்காலை உடலோடு ஒட்டி உச்சந் தலைவரை தூக்கிநின்றாடுவது ஊர்த்துவ தாண்டவம். ஊர்த்துவம் எனில் மேல் எனப் பொருள்தரும். காலை மேல்தூக்கி நின்றாடுதலால் இப்பெயர் பெற்றுள்ளது. சில தலங்களில் வலது காலை ஊன்றி, இடது காலைத்தூக்கி நின்றாடும் தாண்டவ மூர்த்திகளும் உண்டு. திருப்புத்தூரில் பெருமான் ஆடியருளிய 'கௌரி தாண்டவம்' பற்றி விளக்கமாகக் காண்போம்.

ஊர்த்துவ தாண்டவம்

அன்று நிறைமதி நாள். மாலை வேளை. பிறவா யாக்கைப் பெரியோனான பெருமான் சிவசக்தியாகிய கௌரியம்மையுடன் திருக்கயிலையில் எழுந்தருளியிருந்தான். முன்னொரு நாள் திரிபுர சங்கார வெற்றிக் களிப்பால், பெருமான் ஆடிய திருக்கூத்தை மீண்டும் காண அம்மை மனம் கொண்டாள். அம்மையின் திருவுளக் கருத்தினை அறிந்த பெருமான், சற்றே புன்னகை காட்டினார். "திருப்புத்தூர் எழுந்தருளி அங்கே ஆடிக் காட்டுவோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

கௌரி தாண்டவ வரலாறு

அம்மை மனம் மகிழ்ந்தாள். ஆடல் காண ஆவல் கொண்டாள். அருகிருந்த நந்தி தேவரைக் குறிப்புடன் நோக்கினாள்.

மத்தளத்துடன் நந்திதேவர் புறப்பட யத்த னித்தார். திருப்புத்தூரில் அமைந்த சிற்சபை யில், நந்தி தேவரின் மத்தளம் முழங்க, அம்மை அங்கிருந்து கண்டு களிக்கப் பெரு மான் ஆடி அருளினார்.

கௌரி தாண்டவம்

அன்று பெருமான் ஆடியருளிய தாண்டவம், கௌரியம்மையின் விருப்பத்தை நிறைவு செய்யவும், அம்மை அருகிருந்து பார்த்து மகிழவும் நிகழ்ந்ததால் இது 'கௌரி தாண்ட வம்' எனப் பெயர் பெற்றது. இதனைக் காண இலக்குமி தவம் மேற்கொண்டதாகவும் தவத் தின் பயனாய்த் தாண்டவத்தை மகிழ்ந்து கண்டதாகவும் கூறப்பெறுவதால், 'இலக்குமி தாண்டவம்' என்றும் இது பெயர்பெற்றுள்ளது.

'புஜங்கத் திராசம்' என்றும் இத்தாண்டவம் கூறப்பெறுகின்றது. எதிர்பாராது பாம்பு கால் களின் கீழ் வந்துவிடின், எங்ஙனம் அஞ்சிக் காலைத்தூக்குவார்களோ, அங்ஙனம் காலைத் தூக்கியாடுவதால் இப்பெயர் பெற்றது.

காத்தல் தொழிலை இயக்கிட ஆடிய தாண்ட வமாகையால் இதனை 'ரட்சா தாண்டவம்' என்றும் அழைப்பது உண்டு.

கௌரி தாண்டவத் திருக்கோலம்

முதல் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் உள்ள எழிலார்ந்த மண்டப அமைப்பில், தெற்கு நோக்கிய நடராஜப் பெருமானின் திருவருள் மூர்த்தமே 'கௌரி தாண்டம்' நிகழ்ந்த சிறப்பிற்குரிய சந்நிதி. வலதுகாலை முயலகன் மீது ஊன்றி, இடது காலைத்தூக்கி வீசி, பத்துக் கரங்களுடன் திகழும் பெருமான் சிரசில் கங்கையையும், பிறைச்சந்திரனையும் தாங்கி உள்ளார். இடப்புறம் அம்மை, இடது கரத்தை டோலஹஸ்தத்தில் வைத்து, வலது கரத்தில் மலர் தாங்கியவாறு மகிழ்வோடு விளங்குகிறாள். வலப்புறம் நந்தி தேவர்

மத்தளத்தை முளக்கிய வண்ணம் காணப் படுகிறார்.

திருப்புத்தூர்சிற்சபையில் ஆடும்பெருமானின் கௌரிதாண்டவத் திருக்காட்சி காணத்தக்க அருட்காட்சி! பெருமானின் திருமேனியும், திருமுகமும், திருக்கரங்களும், திருவடிகளும் கண்டு களிக்கத்தக்கவை; கருதத்தக்கவையும் கூட! தாண்டவம் காணும் அம்மையின் முக பாவம் நம்மை ஈர்க்கிறது! மத்தளம் வாசிக்கும் நந்தியின் திருமேனியும் அற்புதமாக வடிவமைக்கப் பெற்றுள்ளது!

இறைவனுடைய அசைவே, எல்லா உயிர்களினுடைய அசைவும்! அவன் ஆடுகின்றான், அனைத்தும் இயங்கி ஆடுகின்றன! ஆன்மாக்களின் அனுபவத்திற்காக வைக்கப்பெற்ற சராசரங்கள் ஆடுகின்றன! ஆடும் சதாசிவத்தை, கௌரிதாண்டவ மூர்த்தியை நோக்க நோக்க, நம் உள்ளத்துள் மெய்ப்பொருள் உணர்வுகள் ஆடுகின்றன! ஓ! இது ஞான விருந்தளிக்கும் நடராஜ மூர்த்தம்!

ஞான விருந்தளிக்கும் நடராஜ மூர்த்தம்

## 5. சிறப்பிற்குரிய பைரவர் சந்நிதி

திருத்தளிநாதர் திருக்கோயிலில் பைரவர் சந்நிதி - நாடிய நலம் அளிக்கும்; மேவிய துன்பம் போக்கும்; கூடிய குறைகள் எல்லாம் சூரிய ஒளியைக் கண்ட பனியைப் போல் உலர்ந்து போகும்! பக்தியுடன் பைரவரை வேண்டி நின்றால், விருபிம்யவை விரைவாக சித்திக்கும்! வாழ்வு முற்றும் தித்திக்கும்! பிரார்த்தித்து நிற்போருக்கெல்லாம் பெருகிய வாழ்வளிக்கும் வள்ளலாய்த் திகழ்கிறார் பைரவ சுவாமி! 'குழந்தைப் பேறு' கூடிவர வரமளிக்கும்அருட்கொடையாளராக விளங்குகிறார் பைரவ மூர்த்தி! வளரும் இளம்பிள்ளைகளுக்கு வந்து சேரும் சிறுசிறு நோய்த் தொல்லைகளை, பைரவர் சந்நிதியில்நின்று,

பெருகிய வாழ்வளிக்கும் பைரவர்

ஒரு முறை சொல்லி விட்டால் போதும், இருந்த இடம் தெரியாது நோய்த்தொல்லை நொடியில் நீங்கிவிடும்! பைரவருக்குப் புனுகு சாத்தினால், நம்மைத் தொடர்ந்து வந்து, வாழ்வில் படர்ந்து நிற்கும் தொல் வினைகள், சிறிது சிறிதாக வலுவிழந்து வற்றி விடும்!

திருவருள் நலமளிக்கும் பெருமான் பைரவ மூர்த்தியின் பேரருள் சக்தி மக்களிடையே பிரபலமானது; பெரும் புகழ் பெற்றது. பைரவருக்குப் பல்வேறு வகையில் காணிக்கை வழங்கிப் பெருமானின் பெருங்கருணைத் திருவருளைப் பெற்றுச் செல்லும் வழக்கம் பண்டைக்காலம் முதலாகவே பழக்கத்தில் உள்ளது. முடிக்காணிக்கை அளிப்பது; காது குத்திக்கொள்வது; மாவிளக்கு வைப்பது; புனுகு சாத்துவது முதலான வேண்டுதல்கள் நடக்கும் பைரவ மூர்த்தியின் சந்நிதியில், வாசனைத் திரவியங்கள் போட்டுக்கொண்டு எவரும் செல்வதில்லை. அப்படியொரு மரபு நெடு நாள்களாக இருந்து வருகின்றது.

காணிக்கைகள்

விடுதலை வேள்வியில் தங்களை வேள்விப் பொருளாக அர்ப்பணித்துப்பெரும் புகழ்க்கைக் கொண்ட வீர வேந்தர்களான மருது சகோதரர் இருவரும், பைரவ மூர்த்தியிடம் ஆழ்ந்த ஈடுபாடும், பக்தியும் கொண்டு, தங்கள் குல தெய்வமாகவே பெருமானைப் போற்றி வழிபட்டுள்ளனர் மருதுபாண்டியர் காலத்தில் பைரவருக்கு கடாபலி கொடுக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. சந்நிதியில் அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அமைப்புகளுக்கு அடுத்து உருவாக்கப்பெற்றுள்ள மாமண்டபம் மருது பாண்டியர்களால் கட்டப்பட்டுள்ளது. இம் மா மண்டபத்திலுள்ள தூண்களில் சிலை வடிவங்களாகப் பைரவ மூர்த்தியை இரு கரம் கூப்பி வழிபட்டவாறே இருபெரும் வேந்தர்களும் நின்று கொண்டிருப்பதை இன்றும் கண்டு மகிழ்கிறோம்.

மருதுபாண்டியர் வழிபாடு

துன்பம் எனும் இருள் நீங்க, இன்பம் எனும் சுடரொளியாய், வணங்கும் அன்பர் தம் அகத்துள் வந்தமர்ந்து அருள் பாலிக்கும் பைரவர் வழிபாட்டுச் சிறப்பு—கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தோன்றியுள்ள தென ஆராய்வாளர் கருதுகின்றனர். எனினும் பைரவர் கோயிலில் இடம் பெற்றுள்ள பழைமையான கல்வெட்டுகள், 13 ஆம் நூற்றாண்டிற்கு முன்னமேயே இத் திருவருள் மூர்த்தம் எழுந்தருள் செய்திருப்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

பைரவர் வழிபாட்டுச் சிறப்பும், வழங்கும் திருவருள் நலமும் மக்களிடையே பரவிப் புகழ் ஓங்கிய காரணத்தால், திருத்தளிநாதர் திருக்கோயிலை 'பைரவர்கோயில்' எனப்போற்றிப் பேசிப் பின் 'வயிரவன் கோயில்' எனக்கூறும் வழக்கம் மேலோங்கியது. கல்வெட்டுகளில் பைரவ மூர்த்தி 'ஆண்ட பிள்ளையார்' எனக் கூறப்பெறுகிறார்! ஆண்ட பிள்ளையார் வழிபாட்டிற்குப் பலரும் பொருள் கொடுத்துள்ள செய்திகள் கல்வெட்டுகளில், கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்தே இடம் பெற்றுள்ளன. வயிரவன் கோயில்

இரண்டு பாதங்களையும் பிணைத்து, முழந்தாளை ஒடுக்கித் திருவடிகள் நிலத்தில் பதியாது, உடம்புள் அடங்க வைத்து, இரு கோரைப் பற்கள் விளங்கப் புன்முறுவலுடன் யோக மூர்த்தியாய் அமர்ந்திருக்கும் பைரவர் திருக்கோலம்-காணக் கண்கள் பனிக்கும்; பார்க்கப் பத்திமை பெருகும். திருமார்பை முப்புரி நூலும், முத்துமாலையும் அலங்கரிக்கின்றன. இடதுதிருக்கரத்தைத் தொடையில் வைத்து, வலது திருக்கரத்தில் இடி தரித்து, பரியாங்க நிஷ்டையில் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறார் பெருமான். சூலாயுதத்தையும் ஏந்தியுள்ளார் பைரவ மூர்த்தி. மற்ற திருத்தலங்களில் உள்ள பைரவருக்கு, இத்திருக் பைரவர் திருக்கோலம்

கோலம் மாற்றம் உடையதாகத் தோற்றம் தருகின்றது. தனித்தன்மையும்,தருவதில் வள்ளண்மையும் கொண்டு, தஞ்சம் அடைவார் நெஞ்சங்களில், ஊக்கமும் உற்சாகமும் நீக்கமற நிறைக்கப் பேரருள் புரியும் பெருங் கருணைக் கடவுளாய் விளங்குகிறார் பைரவ மூர்த்தி.

பைரவர் உற்சவமூர்த்தி

பைரவரின் உற்சவ மூர்த்தியான செப்புத்திருமேனி நின்ற திருக்கோலமாய் விளங்குகின்றது. பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காட்சி தரும் பைரவர், கதையைத் தரையில் ஊன்றி, அதன்மீது வலது கரத்தைக் குவித்து வைத்துள்ளார். இடது கரத்தில் கபாலம் ஏந்தி, ஜடாபாரத்துடன். குண்டலங்கள் தரித்து, கழுத்தில் கண்ட மணிகள் விளங்கக் காணப் பெறும் பைரவர் திருவாயின் இருபுறங்களிலும் கோரைப் பற்கள் விளங்குகின்றன. பாம்பை அரைஞாணாக அணிந்துள்ளார். பெருமான் நிர்வாணத் திருக்கோலம் பூண்டிருப்பினும், அசுரனைத் தோலுரித்து தோலை அங்கி போன்று. தோள் முதல் கணுக்கால்வரை இரு புறமும் தொங்க விட்டுக் காட்சி தருகின்றார். இச்செப்புத் திருமேனி கி.பி. 12 ஆம் நூற்றாண்டை ஒட்டியதாக இருக்கலாமென்பது ஆய்வாளர் கணிப்பு.

ஜெயந்தன்பூஜை

உற்சவ மூர்த்தியை, ஓர் ஆண்டின் ஒரே ஒரு முறை எழுந்தருளச் செய்வித்து, திருவீதி உலாவாகக் கொண்டு வருகின்றனர். முன்னிரவு வேளையில் புறப்பாடு செய்விக்கப்பெற்று நள்ளிரவு 12 மணிக்குள் உற்சவரைத் திருக் கோயிலுக்குக் கொண்டு வந்து விடவேண்டும் எனும் மரபு வெகு காலமாக நடைமுறையில் உள்ளது. ஒவ்வொருஆண்டும் சித்திரைமுதல் வெள்ளிக்கிழமை பெருமானுக்கு ஜெயந்தன் பூஜை செய்யும் திருவிழா கொண்டாடப்படு

கிறது. அன்று தான் திருவீதி உலா. 'ஜெயந்தன் பூஜை'க்கு அடிப்படையான ஒரு புராண வரலாறு கூறப்பெறுகிறது.

உலகெங்கும் ஒளியே இல்லை! இருள் சூழ்ந்திருந்த உலகில், அசுரர்களின் தீச்செயல்கள் பெருகின. அசுரர்களின் மாயையால் இருள் சூழ்ந்து நின்ற உலகை விடுவிக்கக்கருதினார்கள் தேவர்கள். காசித் திருத்தலத்தில் பிரகதாரணர் எனும் பெயருடைய முனிவர் ஒருவர், உருத்திரவேள்வி செய்வதையறிந்த தேவர்கள், முனிவரை நாடிச்சென்று மூண்டிருக்கும் நிலையை எடுத்துக்கூறி வேண்டி நின்றனர். வேள்வியில் தேவர்களையும் பங்கேற்கச் செய்தார் பிரகதாரண முனிவர். முனிவரும் தேவர்களும் முனைந்து செய்த வேள்வியில், சிவபெருமான், தமது பேராற்றலில் ஒரு சிறிய பகுதியை வெளிப்படச் செய்து கருணை புரிந்தார்.

பைரவர் புராணம்

பைரவர் வேள்வியில் தோன்றினார். முனிவரும் தேவர்களும் சிவபெருமானின் திருவருளை எண்ணி உருகினர். எழுந்து நின்று பைரவரைத் தொழுதனர். "அசுரர்களின் மாயையை நீக்க வந்த அற்புத நாதரே, "வணங்குகின்றோம்" என்றனர். "வேள்வியில் தோன்றிய வேத விழுப்பொருளே! வேண்டுகின்றோம்" என்றனர். "உங்கள் வேண்டுதலை ஒரு நொடியில் நிறைவு செய்வோம்" என்றார் பைரவர்.

வேள்வியில் தோன்றினார்

பைரவரின் ஈர நெஞ்சம், உலகில் சூரிய சந்திரரைத் தோன்றச் செய்தது! பைரவரின் வீரச்செயல் அசுரர்களைப் பூண்டோடு அழித்து ஒழித்தது!

எட்டுத்திசைகளிலும் தமது 'ஈரமும், வீரமும் நிறைந்துபெருக, பைரவர் தம்மைப்போலவே எண்மரைப் படைத்தருளினார். அசிதாங்க பைரவர், உரு பைரவர், சண்ட பைரவர், குரோத பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், ஏற்றுயர் பீடண பைரவர், சங்கார பைரவர் என எட்டுப் பைரவர்களையும் எண் திசைகளில் அனுப்பி வைத்தபின், பைரவர் முருகப்பெருமான்,கூறக்கொன்றைவனமாகிய திருப்புத்தூரின் பெருமையைஅறிந்தார்.மறை யுருவாகிய நாய் வாகனத்தை உடன் அழைத்துவராது, புனிதத் திருவிடமான கொன்றை வனத்துக்கு தனியே வந்தடைந் தார். புண்ணிய தீர்த்தமான ஸ்ரீதளியில் நீராடி, அதன் கரையோரம் யோக நிஷ்டை யில் மேற்கு முகமாக அமர்ந்தார் பைரவர்.

என் திசை பைரவர்

பைரவரின் யோக நிஷ்டைக்கு மனமிரங்கித் தோன்றிய சிவபெருமான், "பைரவா! நீ இங்கேயே தங்கி, எமது அடியார்களைக் காப்பாயாக!" என உத்தரவு செய்ய,பைரவர் திருப்புத்தூர் கொன்றை வனத்திலேயே வீற்றிருந்து அருள்பாலித்தார்.

பைரவர் கொன்றைவனம் வருகைபுரிந்தார்

ஒரு நாள் பெரிய பூதம் ஒன்று, தலையில் சுமக்க முடியாதசுமையாக மலையொன்றைச் சுமந்தவாறு, ஒருகரத்தில் இடியைப்பிடித்துக் கொண்டு ஓடி வந்தது. பூதம் பைரவரை வணங்கியது. தலையிலிருந்த மலை, தானே கிழே விழுந்தது! கரத்திலிருந்த இடி பைர வரின் கையைச் சென்றடைந்தது! பூத வடி வம் பொலிவான தேவ வடிவமாக மாறியது! "அடியேன் இந்திரன் மகன் சயந்தன்!"என இரு கரம் கூப்பி நின்ற தேவன், தன் வரலாற் றைக் கூறத்தொடங்கினான்.

சயந்தன் வந்தான்

தேவேந்திரன் புதல்வனாகிய சயந்தன், ஒரு முறை காந்தருவ ராஜ குமாரனைத் தேடிச் சண்ட மலைக்கு மேற்கே, சத்தியகிரிக்குத் தெற்கே சென்று கொண்டிருந்தான். உள்ளத்தை ஈர்க்கும் ஒருதேவநாதத்தைச் செவிப் படுத்திய சயந்தன், அது எங்கிருந்து வருகிற தெனச் சற்று நேரத்தில் தேடிக் கண்டான். ஒரு மலைக் குகைக்குள்ளிருந்து வந்த அந்த வீணா கானத்தை கேட்கக் கேட்க கிறக்கம் கொண்டான் சயந்தன். அந்தஇனிய ஒலியை மீட்டுவது யாரெனப் பார்க்கும் ஆவலில் மெல்ல, குகைக்குள் நுழைந்தான். அமுத கானத்தை அழகிய விரல்கள் கொண்டு வீணையில் மீட்டிக் கொண்டிருந்தாள் பேரழகி ஒருத்தி.

சயந்தன் வரலாறு

தங்கம் போலிருந்த அவள் தேகமும், அங்கங்களில் பூரித்து நின்ற பொலிவும், அமுதூறிய இதழ்களும், நிலவூறிய விழிகளும் எங்கும் கண்டிராத எழிற் பேரழகாய் சயந்தனுக்குத் தோன்றியது. 'இவளை அடையாது இனி நான் செல்லேன்' என மனதில் உறுதி கொண்டான்.

எழிற் பேரழகு

மலைக் குகையை ஒரு சிறு குன்றினால் அடைத்தான். பேரழகியிடம் சென்று "பெண்ணே!" எனக்கிறங்கி அழைத்தான்.

"ஐயோ! இதென்ன பேரிடி! ஐயா! நான் முனிவர் ஒருவரின் மனைவி. தயவுசெய்து இங்கே நிற்காது ஓடி விடுங்கள்" என்றாள் அந்தப் பேரழகி.

"தெரிந்து தான் வந்தேன்! முனிவர் உனக்கு இன்பம் தர முடியாது. என்னால் உனக்கு எல்லா இன்பங்களும் தர முடியும்!" எனக் கூறிக்கொண்டே அவளை நெருங்கினான்.

முனிவரின் சாபம்

அந்த நேரத்தில் முனிவர் வந்தார். சினம் கொண்டு சபித்தார். "எந்த மலையைக் கொண்டுஅடைத்தாயோ,அந்தமலையையே பூத வடிவம் கொண்டு சுமந்து திரிவாயாக! இடி உன் கரத்தைப் பற்றட்டும்" முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து மன்னிக்குமாறு வேண்டினான் சயந்தன். முனிவர் இரங்கி அருளினார். "கொன்றைவனமாகிய திருப்புத்தூரில் யோக பைரவர் முன்செல்லும் காலத்தில் என் சாபம் நீங்கும்" என்றார் முனிவர்.

சித்திரை முதல் வெள்ளி

சித்திரைத் திங்கள் முதல் வெள்ளியன்று யோக பைரவரின் திருவருளால் சாப விமோசனம் அடைந்தான் சயந்தன். எனவே சித்திரைத் திங்கள் தோறும் முதல்வெள்ளியன்று சயந்தன் திருப்புத்தூர் பைரவர் சந்நிதிக்கு வருகை தந்து, பூஜிப்பதாகக் கொண்டு,சயந்தன் திருவிழா கொண்டாடப் பெற்று வருகிறது.

சயந்தன் திருவிழா

சயந்தன் திருவிழாவன்று காலை தொடங்கி, இரவு பன்னிரண்டு மணி வரை வேள்வி பைரவர்சந்நிதியில் நடைபெறும். மாலையில் 'அஷ்ட பைரவ அர்ச்சனை' நடைபெறும். எட்டு குருக்கள் அர்ச்சிக்க, எட்டுப் பேர்மந்திரம் சொல்ல, எட்டுமலர்களை ஒரேகாலத்தில் அர்ச்சித்து, எண்மரும் ஒரேகாலத்தில் கற்பூர தீபம் காட்டுவர். எண் வகை நெய்வேத்தியங்கள் படைக்கப் பெறும்.

அன்று இரவு உற்சவ மூர்த்தி குதிரை வாகனத்தில் திருவீதிஉலா வருவார். உற்சவருக்கு தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை விண்ணப்பம் செய்யப் பெறும்.

# 6. சந்நிதிகள் கொண்ட திருக்கோயில் வனப்பு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், சங்க காலத்தில் கட்டப்பெற்ற திருக்கோயில்கள், செங்கல் கட்டடங்களையும், மரவிட்டங்களை யும் கொண்டு அமைக்கப்பட்டதாக அறிகின்றோம். குடி மக்களின் பக்தி உணர் வுக்கும், பண்பாட்டு உயர்வுக்கும் திருக் கோயில் வழிபாடு இன்றியமையாததென உலகாண்ட மன்னர்கள் உறுதியாகக் கருதி னர். மன்னர்களும் உள்ளார்ந்த இறையுணர் வுடன் விளங்கினர். ஆட்சிச் சிறப்பிற்கு ஆண்டவனின் அருள் நலம் அவசியத் தேவையென நம்பினர்.எனவேதிருக்கோயில் உருவாக்குவதை தங்கள் தலையாய திருப் பணியாக எண்ணிச் செயற்பட்டனர்.

திருக்கோயில்கள் மன்னர்களின் உருவாக்கம்

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை நாடாண்ட மன்னர்களால் எடுப்பித்த திருக் கோயில்களே பெரும்பான்மையும் தமிழ்நாடு முழுமையும் நிறைந்திருப்பதை கல்வெட்டுச் செய்திகளால் அறியமுடிகிறது. திருக்கோயில் களின் செயற்பாட்டிற்கும், வழிபாட்டிற்கும் உரியஉதவிகளை குடிமக்கள் வழங்கியுள்ளார் களேயன்றி, கோயில் உருவாக்கப் பணியில் முழுக்கமுழுக்க மன்னர்களே முன்னின்றுள் ளனர்.

இறை நெறியில் ஈடுபாடு கொண்டு, தங்கள் அரிய நேரங்களைத் திருப்பணி ஆக்கத்திற் கென அர்ப்பணித்துச் செயற்கரிய செயல் களாற்றிய மாபெரும் மன்னர்களை நன்றி யுணர்வோடு எண்ணி மகிழ்கின்றோம். அதே நேரத்தில் சோழ மன்னன் செங்கணான் ஆற்றிய திருக்கோயில் உருவாக்க அற்புதச் சாதனை திகைப்பூட்டிப் பெருமிதம் கொள் ளச் செய்கிறது!

சோழன் செங்கணான்

'திருக்கோயில்' எனச் சிந்திக்கின்றபோது, ஒரு விநாடி சோழ மன்னன் செங்கணான் ஆற்றிய பிரமிக்கத்தக்க பெரும் பணியைய

பிரம்மிக்கத்தக்க பெரும் பணி

நினைந்து நெகிழ்வது தமிழர்களின்! கடப்பாடு ஆயிற்றே?

ஒன்றா? இரண்டா? பத்தா? இருபதா? சோழன் செங்கணான் சிவனுக்கென எடுப்பித்த திருக்கோயில்கள் எழுபத்தெட்டு! திருமாலுக்கென எடுப்பித்த ஆலயங்கள் எழுபது! இத்தகைய செயற்கரிய பெருஞ்செயலை அருளாளர் இருவர் தங்கள் திருப்பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் . . ."

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்து உலகாண்ட
திருக் குலத்து வளச் சோழன் . . ."

எனத் திருமங்கை ஆழ்வாரும் சோழ மன்னன் செங்கணானின் பிரமிக்கத் தக்க பெருந் திருப்பணிகளைப் போற்றிப் பாடியுள்ளனர்.

ஒரு நினைவூட்டல்

திருப்புத்தூர் திருக்கோயிலின் அமைப்பும் வனப்பும் எத்தகையதென எண்ணிப்பார்க்க முயலும் நேரத்தில், திருக்கோயில்களின் வரலாற்றில் திகைப்பூட்டி நிற்கும் செய்தியைச் சிந்தை கொள்ளச் செய்வது சிறப்பிற்குரியதெனக் கருதியே, அதனை இங்கு நினைவூட்டி உள்ளோம்.

முதல் கற்றளி

சங்ககாலத்தில் திருப்புத்தூர் ஆலயம் செங்கல் மரக்கட்டிடமாகவே இருந்திருக்க வேண்டும். கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆலயம் 'கற்றளி' யாகக் கட்டப்பட்டு, பாண்டிய மன்னர்கள் உருவாக்கிய முதல் கற்றளி எனும் தனிச்சிறப்பும் பெற்று, 'ஓங்குகோயில்' என உயர்வாக அழைக்கப் பெற்றுள்ளது. கருவறை மட்டுமின்றி விமானமும் கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்குள் திருமஞ்சனத் தீர்த்தத்தை நிரப்பி வைக்க, ஒரு கல் தொட்டி இருக்கிறது.

கட்டடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை அதிட்டானம்(பீடம்) சுவர்(கால்) பிரஸ்தரம் (கூரை) கிரீவம் (கழுத்து) சிகரம் (தலை) குடம் (ஸ்தூபி) ஆகியவையாகும். இந்த அங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உறுப்புக்களுடன் உவமிப்பர். ஆலய ஆதாரப் பகுதி

இத்தகைய அமைப்புமுறை பின்பற்றப் பெற்ற கருவறையின் நிலை மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கருவறையின் அர்த்த மண்டப வாயிலில் இருபுறமும் துவார பாலகர் சிற்பங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் வெளிப்புற வாயில் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தரப் பகுதியின் கொடுங்கையில் கூடுகள் அமைக்கப் பெற்று, எழிலார்ந்த சிறிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கீழே பூதவரி காணப்படுகின்றது. கருவறையும், அர்த்த மண்டபமும் முதன் முதலில் கோயிலை எடுப்பித்த காலத்தில் உருவாக்கம் பெற்றிருக்க வேண்டும். கருவறையும் அர்த்தமண்டபமும் கிழக்குநோக்கி எடுப்பித்துள்ளனர். அதிட்டானப் பகுதி ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், கபோதம், வேதிகை ஆகியவை கொண்டு விளங்குகின்றன. சுவர்ப் பகுதி பல கால் வரிகளையும், தேவகோட்டங்களையும் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. பாண்டியர் காலக் கட்டட அமைப்பில் தேவ கோட்டங்களில் சிற்பங்கள் அமைப்பதில்லை. திருத்தளியின் கருவறைத் தேவ கோட்டங்களிலும் சிற்பங்கள் இடம் பெற இல்லை. தேவ கோட்டங்களின் மேலுள்ள மகர தோரணங்கள் மிகுந்த வனப்புக் கொண்டவை. வேலைப்பாடுகள் வியக்க வைக்கின்றன! கருவறை

பிரஸ்தரப் பகுதியில் கொடுங்கையின் அடியில் பூத வரிமானமும் மேலே யாளி வரிமானமும்

உள்ளன. கீர்த்திமுகக் கூடுகளின் நடுவட்டத்தில் நேர்த்தியான சிற்பங்கள் அழகொளிர விளங்குகின்றன. ரிஷப வாகனர், அர்த்த நாரீசுவரர், கண்ண பெருமானின் லீலைகள், லிங்கம், நந்தி, வாலி, சிவபூஜை, குழந்தையைப் பிடித்த பெண்ணொருத்தி அரிவாளுடன் காட்சி தரல், இரண்டு குரங்குகள் பேன் பார்க்கும் அதிசயம், மூன்று குள்ளபூதங்களின் நான்கே கால்கள் கொண்ட அற்புதம் ஆகிய சிற்பங்களின் கலை ஈர்ப்பு கண்களை அகல விரியச் செய்கின்றன!

கலை ஈர்ப்பு

மூன்றுதள விமானம் முழுக்கக் கல்லால் உருவாக்கப் பெற்றுள்ளது! தளங்களின் நடுவில் சாலை அமைப்புகளும், மூலைகளில் அழகிய கூட அமைப்புகளும், கிரீவத்தின் நான்கு மூலைகளிலும் ரிஷப அமைப்புகளும் காணப்படுகின்றன. மத்தியில் விமான தேவதைகளோடு கூடிய கோட்டங்கள் இடம் பெற்றுள்ளன. கோட்டங்களின் மீது சிங்கத் தலையால் அலங்கரிக்கப்பட்ட கூடுகள் உள்ளன. உருண்டையான சிறுசிறு தூண்களின் மேல் தாமரை மலர்கள் இதழ்விரித்திருக்கும் காட்சி கண்களைக் கவர்வதாய் உள்ளது. விமானத்தின் தெற்கில் கீழே தட்சணாமூர்த்தியும், மேலே யோக தட்சணாமூர்த்தியும், மேற்குப் புறம் யோக நரசிம்மரும், வைகுண்டநாதரும் வடக்கே பிரம்மாவும் வீற்றிருக்கின்றனர்!

கருவறை விமானம்

முதல் திருச்சுற்றில் (பிரகாரம்) அஷ்டதிக்குப் பாலர்களுக்கான பலிபீடங்கள் இடம் பெற்றுள்ளன. தெற்கிலுள்ள தேவ கோட்டத்தின் முன், தட்சணாமூர்த்தியின் திருமேனி பிரதிஷ்டை ஆகி உள்ளது. தட்சணாமூர்த்தியின் கருவறைக்கு முன்பாகச் சிறியமண்டபம் உள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வீர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் இத்திரு

தட்சணாமூர்த்தி

மேனியை எழுந்தருள் செய்வித்திருக்கலா மெனக் கல்வெட்டுகளால் அறிகின்றோம்.

முன்பு கோமுகத்திற்கு அருகில் இருந்த துர்க்கையை, சிறிது தெற்கில் தள்ளி வைத்து அண்மைக் காலத்தில் ஓர் ஆலயத்தை உரு வாக்கி வழிபாடு செய்து வருகின்றனர். துர்க்கை

முதல்திருச்சுற்றின் மேற்கில் தலவிருட்சமான கொன்றை உள்ளது. வடமேற்கு மூலையில் அகத்தியலிங்கர் கோயிலும், வடக்கில் சண்டிகேசுவரர் கோயிலும் அமைந்துள்ளன! இத்திருச்சுற்றில் பிரகார மாளிகை உள்ளது. பிரகார மாளிகையின் நான்கு மூலைகளிலும் மண்டபங்கள் இருந்திருக்கின்றன. கருவறை யின் தெற்கில் பிரகார மாளிகையில் சப்த மாதர் உருவங்களும், அதையடுத்து ஜேஷ்டா தேவியின் திருவுருவமும் உள்ளன. தலவிருட்சம்

கருவறைக்கு வடக்கிலுள்ள பிரகார மாளிகை யில் மிழலை ஈசர், திருமறைக்காட்டு ஈசர், விநாயகர் ஆகியோரது ஆலயங்கள் உள்ளன.

கி பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்ற சௌமிய நாராயணப்பெருமா னின் அமர்ந்த திருமேனிவடபுறத்துப் பிரகார மாளிகையின் திரு மண்டபத்தில் வீற்றிருக்கி றது. பெருமாளின் இருபுறமும் பிருகு முனிவரும் பூதேவியும் உள்ளனர்.

முதற்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் எடுப்பும், எழிலும் கொண்ட மாமண்டபம் கலைச்செறிவுடன் திகழ்கிறது. மண்டபத் தூண்களும், கொடுங்கைப் பகுதிகளும் கலா நுணுக்கத்துடன்விளங்குகின்றன. கல்வெட்டு களில் 'காலிங்கராயன் மண்டபம்' எனக் குறிப்பிடப்பெறும் மண்டபம் இதுவாகத்தான் இருக்க வேண்டும். இம்மண்டபத்தில்தான் காலிங்கராயன் மண்டபம்

தெற்கு நோக்கிக் 'கௌரிதாண்டவம்' நிகழ்த்திக் கொண்டிருக்கும் நடராஜப்பெருமானின் ஈர்ப்பு மிகுந்த இனிய திருமேனி இடம் பெற்றுள்ளது. ஆடல் வல்லான் சந்நிதிக்கு முன்னுள்ள காலிங்கராயன் மண்டபத்தின் தூண்கள் அரிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கலைக்காட்சிகளாகத் திகழ்கின்றன. தூண்களின் அமைப்புப் பார்த்து வியக்கத்தக்கது. அவைகளில் அமைக்கப்பெற்றுள்ள அரிய சிற்பங்களின் வனப்பு, கண்டு மகிழத்தக்கது. இம்மண்டபத்தின் கொடுங்கைகள் மரத்தால் ஆனவைபோலவே கல்லில் செதுக்கப்பட்டுள்ள அருமை, கலைஞனின் கற்பனைக்கும், கைத்திறத்திற்கும் கிடைத்த தனிப்பெருமை.

கற்பனையும் கைத்திறமும்

இரண்டாம் திருச்சுற்றின் வாயில் எதிரே நந்தியும், கொடிக்கம்பமும், பலி பீடமும் இடம் பெற்றுள்ளன. முதல் திருச்சுற்று வாயிலையும், இரண்டாம் திருச்சுற்றின் வாயிலையும் இணைத்துள்ள மண்டபத்தில் நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. இரண்டாம் திருச்சுற்றிலும் பிரகார மாளிகை இருந்திருக்க வேண்டும்.

இரண்டாம் திருச்சுற்றின் தெற்கில் திருமடப்பள்ளியும், அதனையடுத்து சுப்பிரமணிய சுவாமி சந்நிதியும் உள்ளன. முருகப் பெருமான் வடக்கே பார்த்து நிற்கும் திருக்கோலம் அரிதல்லவா? ஆம்! இது அரிய சந்நிதி! அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் பெற்று, இரு தேவியருடன் வீற்றிருக்கும் முருகப்பெருமான் ஆலயம் அண்மையில் புதுப்பிக்கப் பெற்று, எழுந்தருளச் செய்வித்துள்ளனர்.

வடக்கே பார்த்த முருகன்

இரண்டாவது பிரகாரத்தின் வடக்கில், பைரவ மூர்த்தி ஆலயம் மேற்கு நோக்கி உள்

ளது. ஆலயக் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அமைப்புக்களுடன் இருந்திருக்க வேண்டும். முன் மண்டபத்தை அடுத்துள்ள மாமண்டபம் மருது சகோதரர்களால் கட்டப்பெற்றது. மண்டபத் தூண்களில் மருதுபாண்டியர் இருவரும் பைரவரை வணங்கும் திருக்கோலத்தில் காணப்பெறுகின்றனர்'

பைரவர் ஆலயம்

பைரவர் ஆலய விமானம், பீடம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய அனைத்து அம்சங்களையும் பெற்றுத் திகழ்கிறது. விமானம் செங்கல்லினால் ஆனது. விமானத்தின் மேல் நிலையில் பைரவர், ரிஷபவாகனர், கஜசம்ஹாரமூர்த்தி ஆகிய கலைச் சிற்பங்களும், கீழ் நிலையில் காமவயப்பட்ட பெண்களின் நிலையைச் சித்தரிக்கும் சுதைச் சிற்பங்களுர் உள்ளன.

நாகேஸ்வரர் ஆலயம்

பைரவர் ஆலயத்திற்குப் பின்புறம் 'கிழக்கு நோக்கி இருக்கும் நாகேஸ்வரர் கோயிலின் அமைப்பு, பைரவர் ஆலய அமைப்பைப் போலவே காணப்படுகிறது குறிப்பாகக் கும்பபஞ்சரங்களும், கும்பபஞ்சரங்கள் மீதுஅமைந்துள்ள மகரதோரணங்களும் சிறப்பானவை.

இரண்டாம் திருச்சுற்றின் வடக்கில், நாகேஸ்வரர் கோயிலை ஒட்டி மூன்றாம் திருச்சுற்றுக்குச் செல்ல ஒரு வாயில் உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தில் நுழை வாயில் 'நம்பியாண்டார் நம்பிவாயில்' என அழைக்கப்பெற்று வருகின்றது. நுழை வாயிலின் வலது புறம் திருக்கல்யாண மண்டபமும், இடது புறம் தென்கிழக்கு மூலையில் 'யானைக் கட்டு'ம்உள்ளன. எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே சடையவர்மன் வீர பாண்டியன் காலத்தில், மன்னார் குடையான் பொற்படிக நாயகன் திருவம்பலப் பெருமாள் என்பவன்

மூன்றாம் திருச்சுற்றை அமைத்து, சில தெய்வத் திருமேனிகளைப்பிரதிஷ்டைசெய்த தாகக் கல்வெட்டுச் செய்தி ஒன்று தெரிவிக் கிறது.

அம்பாள் கோட்டம்

திருத்தளிநாதர் திருக்கோயிலுக்கு இடது புறத்தில் அம்பாளுக்குத் தனிக் கோட்டம் கி பி. 12ஆம் நூற்றாண்டிலேயே உருவாக்கம் பெற்றுள்ளது. 'சிவகாம சுந்தரி' எனவும், 'சிவகாமியம்மை' எனவும் திருநாமம் கொண் டுள்ள தேவியின் தனித் திருக்கோயிலை அமராபதிபுதூர் 'வயிநாகரம்' நாகப்பசெட்டி யார் குடும்பத்தினர் இருபதாம் நூற்றாண்டின் உதய காலத்தில் திருப்பணிகள் செய்து புதுப் பித்துத்திருக்குடமுழுக்கு செய்வித்துள்ளனர். கருவறை, அர்த்த மண்டபம், திருச்சுற்றுடன் கூடிய மாமண்டபம் ஆகியவை உள்ளன. கோட்டைச் சுவரே திருத்தளியின் வட மதில் சுவராக அமைந்துள்ளது ஸ்ரீதளி தீர்த்த ஊருணி கோட்டைச் சுவருக்கு வடமேற்கில் உள்ளது

## 7. வனப்பு மிக்கச் செப்புத் திருமேனிகள்

சிற்பக்கலை

தமிழகத்தில் சிற்பக்கலையின்பிறப்பும்,வளர்ச் சியும் சமய உணர்வை ஆதாரமாகக் கொண் டவை. சிற்பக்கலை வல்லுநர்கள் மரத்தாலும், சுதையாலும், கல்லாலும், உலோகங்களாலும் சிற்பத் திருமேனிகளை உருவாக்கி, கலையு ணர்வோடு, கடவுளுணர்வை மேலோங்கச் செய்தனர். தெய்வத் திருவுருவங்கள் நம் நாட்டுச் சிற்பக்கலையில் முதன்மை பெற்றுள் ளன. கலைக்குக் கற்பனா சக்தி மூலக்கூறாக இருப்பினும், நமது நாட்டின் திருக்கோயில் களில் இடம்பெற்றுள்ள திருவுருவச் சிற்பத் திருமேனிகள், வெறும் கற்பனையை அடிப்ப டையாகக் கொண்டு உருவாக்கியவை அல்ல. எனவே அவை வெறும் காட்சிக்குரிய கவின் கலையாக மட்டுமின்றி, காட்சிக்கும் அப்பால்

நம்மை ஈர்த்துச் சென்று, கருத்துகளையும், உணர்வுகளையும் ஊட்டுகின்றன.

கடவுள் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறார்; எல்லாத் திசைகளிலும் பரந்து இருக்கிறார். என்பதனை எடுத்துக்காட்ட கடவுள் திருவுருவத்தில் நான்கு கரங்கள் அல்லது எட்டுக் கரங்களை அமைத்து உருவாக்கினர். திசைகளை நான்கு என்றும், எட்டு என்றும் கணிப்பது வழக்கம் அல்லவா? இது ஓர் எளிய எடுத்துக்காட்டு. இத்தகையக் குறிப்புப் பொருள்களை உணர்த்தவே தெய்வத் திருவுருவங்களின் அங்கங்களை வடித்து, அவைகள் ஏற்கும் கருவிகளையும் காட்டச்செய்தனர் கலை வல்லுநர்.

எளிய எடுத்துக்காட்டு

சிற்பிகளுக்குக் கற்பனை ஆற்றலும், கலை உணர்வும் செழுமை பெற்றிருப்பினும், தாங்கள் எண்ணியவாறோ, விரும்பியவாறோ திருவுருவங்களை அமைத்து விடும் மரபு இல்லை! தியானித்து, மந்திரங்களை ஜெபித்து வழிபாட்டில் மனத்தை ஒருமுகப்படுத்தி, அவைகளின் விளைவாக உள்ளக்காட்சியில் தோற்றமாகும் திருவுருவத்தையே, தமது கரத்தாலும், கருத்தாலும் சிற்பிகள் வெளிப்படுத்துவர். அவைகளே வழிபாட்டிற்குரியவை. அப்படி உருவாக்கிய திருவுருவத் திருமேனிகள் தான் நமது திருக்கோயில்களில் கற்சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகளாகவும் திகழ்ந்து, நீண்ட நெடுங்காலமாக, வேண்டுதல் வேண்டாமை இல்லாத விழுப்பொருள்களாக விளங்கி வருகின்றன. மூலமூர்த்திகளாகத் திருக்கோயில்களிலேயே இடம் பெயராது அமைக்கப்பெறும் திருவுருவத் திருமேனிகள் பெரும்பான்மையும் கருங்கல்லால் ஆனவைகளே. உலோகங்களால் உருவாக்கப் பெறும் திருவுருவங்கள் பெரும்

விழுப்பொருள் உருவமைக்கும் மரபு

பான்மையும் உற்சவ மூர்த்திகளாய் விளங்கி வருகின்றன. இவை 'செப்புத்திருமேனிகள்' 'பஞ்சலோக மூர்த்திகள்' எனக் கூறப் பெறு கின்றன.

திருப்புத்தூர் திருத்தளியில் தெய்வத் தன்மையுடனும், தேர்ந்த கலைச் செறிவுடனும் திகழும் அழகொளிரும் செப்புத் திருமேனிகள் நாற்பது உள்ளன. இவை கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து அண்மைக்காலம் வரையிலான எழில் கொஞ்சும் திருவுருவத் திருமேனிகள்.

ஆடல் வல்லான் நடராஜப் பெருமானின் சந்நிதியிலுள்ள சுரங்கத்திலிருந்து கிடைத்தவையெனக் கூறப் பெறுகின்ற இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூன்று செப்புத்திருமேனிகள் கண்டு வியக்கத் தக்கவை. ஒன்றை ஒன்று விஞ்சும் வகையில் கலை நுணுக்கத்தோடு திகழும் இச்செப்புத் திருமேனிகள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டை ஒட்டியதாக இருக்கலாமென ஆய்வாளர் கருதுகின்றனர்.

இராமன் செப்புத் திருமேனி

பத்ம பீடத்தில் இரு கரங்களுடன் வில்லேந்திய பாவனையில், நின்ற திருக்கோலம் கொண்டுள்ள இராமனின் சௌந்தர்யம் பார்த்து மகிழத் தக்கது. அடடா, அந்த முகப்பொலிவில் சிற்பி ஊட்டியிருக்கும் கம்பீர ஈர்ப்பு, உள்ளத்தைக்கவ்விப்பிடிக்கிறது! மார்பில் ஆரங்களும் முப்புரிநூலும் விளங்குகின்றன மகுடம்தாங்கிமுழங்கால்வரை ஆடை அணிந்து உள்ள இராமனின், பின்புறம், குழற்பலகற்றைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உயரமான திருமேனி. உற்றுச்சற்று நேரம் பார்த்தோமானால்-

"மையோ மரகதமோ. மறிகடலோ மழைமுகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்"

எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடியுள்ள பாடல்-நம் உதட்டில் உலாவரும்! அத்தனை அழகுத்திருவுருவமாக விளங்குகிறதுஇராமன் சிலை!

இலக்குவன் திருமேனியும் நின்ற கோலமாக வடிக்கப்பட்டுள்ளது. வில்லைப்பயன்படுத்தும் பாவணையில், இடது காலைச் சற்றே முன் வைத்துள்ளான். மகுடம் தரித்து, நீள் செவிகளில் தோளைத்தொடுகின்ற மகரகுண்டலங்கள் அணிந்து விளங்கும் இலக்குவனின் மார்பில் ஆரங்களும், பாதங்களில் சங்கிலிகளும் திகழ்கின்றன. ஆடையை வரிந்து கச்சையாகக் கட்டியுள்ள இலக்குவனின் முகபாவம், இராமனைப் போலின்றி வேறுபடும் தன்மை கண்டு களிக்கத் தக்கது. இலக்குவன்

"தோளையே சொல்லுகேனோ? சுடர் முகத்து
உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ?அல்லவை வழுத்துகேனோ?
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பல்
ஆற்றேன்"

எனக்கம்பன்சீதையின்பேரெழிலைவர்ணிக்க வார்த்தை கிடைக்காது தடுமாற்றம்கொண்டு வினவுகிறான்! அத்தகைய திகைப்புணர்வையே, திருப்புத்தூர் திருக்கோயிலில்உள்ள சீதையின் செப்புத் திருமேனியைக் காணும் போது நாம் பெற்றுப் பிரமிக்கிறோம்! கொள்ளை அழகு கொண்ட கோலத் திருமேனி! கணுக்கால் வரை வரிவரியான வேலைப்பாட்டுடன் அமைந்த ஆடையை அணிந்துள்ள சீதையின் மார்பை பல மாலைகள் அணி செய்கின்றன. மார்புக் கச்சை காணப்பட இல்லை. நின்ற திருக்கோலத்தில் நளினம், பெண்மைக்குரிய மென்மைத் சீதை

தன்மை, கவர்ந்திழுக்கும் சாயல் இவைகளை யெல்லாம் காணச் செய்துள்ள கலைஞனின் அற்புதப் படைப்பாற்றல் நம்மைக் களிப் பூட்டித் திகைப்பூட்டுகின்றது.

ஆண்டின் சித்திரை முதல் வெள்ளிக்கிழமை, அருள்பாலிக்கத் திருவீதி உலா வருகின்ற பைரவர் செப்புத் திருமேனி, நின்றநிலையில் பத்ம பீடத்தில் உள்ளது. பாம்பு சுற்றிய கதையை வலது கரத்திலும், கபாலத்தை இடது கரத்திலும் கொண்டுள்ள பைரவர் ஜடாபாரத்துடன் காட்சி அளிக்கிறன்ார். கோரைப் பற்கள் தெரிய முகப் பொலிவில் பெருமிதமும், பேராண்மையும், பேரருளும் விளங்க, கழுத்தில் மணிகள் அலங்கரிக்க, குண்டலங்கள் தரித்து நிர்வாணத் திருக் கோலத்தில் தரிசனம் தருகின்ற பைரவமூர்த் தியைப் பார்த்தவுடனேயே வணங்கத் தோன்றிவிடுகின்றது. இருகரம் கூப்புகின் றோம். இந்த செப்புத் திருமேனியை 'பைரவர்' என முதன் முதலில் தெளிவாக் கிய ஆய்வாளர் டி.ஏ. கோபிநாதராவ் எனக் கூறப்படுகிறது. இது போன்றதொரு அழகிய பைரவர் திருவுநவத்திருமேனி, திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயி லில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கி.பி, 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகப் பைரவர் செப்புத் திருமேனி கணிக்கப் பட்டுள்ளது.

பைரவர்

ஆடல் வல்லான் நடராஜப்பெருமான் ஆனந்த தாண்டவத் திருக்கோலத்தில் குமிண் சிரிப்பு டன் காட்சி அளிக்கிறார். நடராஜ மூர்த்திக் கென திருமுகப் பொலிவை ஈர்ப்புடையதாக, இதயத்தைக் கவரும் அற்புத பாவனையுடன் எப்படித்தான் உருவாக்குவார்களோ? எத்த கைய முக பாவம்? எத்தகைய அக ஈர்ப்பு? ஊன்றிய திருவடியின் கீழ், முயலகன் தலை

தூக்கிப் பெருமானைப் பார்க்கும் முகபாவம் கூட நம்மைக் கவருவதாய் உள்ளது! பெருமானின் பின்புறமுள்ள பிரபையில், முப்பத்தொன்று சுடர்கள், மகர வாய்களிலிருந்து வெளிப்படுத்துவது போல் காட்டப்பட்டிருக்கும் கலா நேர்த்தி கண்டு ரசிக்கத் தக்கது. நான்கு கரங்களைக் கொண்ட பெருமான் பின்னிரு கரங்களில் உடுக்கையும், நெருப்பும் தாங்கி, முன்னிரு கரங்களில் அபயமும், கஜ ஹஸ்தமும் காட்டி, வலது பாதத்தை ஊன்றி, இடது பாதத்தை உயர்த்தி, ஆனந்த ஆடல் திறம் உணர்த்தி காட்சி தருகின்றார். விரிசடையின் வலது புறம் கூப்பிய கரங்களுடன் கங்கையும், இடது புறம் பிறைச்சந்திரனும் காணப்படுகின்றன. வலது கரத்தைப் பாம்பு சுற்றியுள்ளது. வலது திருவடியின் பின்புறம் பாம்பொன்று படமெடுத்து நிற்கிறது. செவிக் குண்டலங்கள், மார்பு முப்புரிநூல், வயிற்று உதர பந்தம், இடைக்கச்சு, வலதுகால் ரட்சா பந்தனம்ஆகியவைதிருமேனியில்தெளிவாகத் தெரிகின்றன. பெருமானின் அருகிருக்கும் சிவகாமி அம்மை, வலதுகரத்தில் மலர்ஏந்தி, இடது கரத்தை டோலஹஸ்தத்தில் வைத்துள்ளார். ஆடல்வல்லான்

திருமகளுடனும், பூமகளுடனும் நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கின்ற திருமால் திருவுருவத் திருமேனி, கிரீட மகுடம் தரித்து, நான்கு திருக்கரங்களுடன் திகழ்கிறது. பின் இரு கரங்களில் சக்கரமும், சங்கும் விளங்குகின்றன. முன் இரு கரங்களில் ஒன்றில் அபயம் காட்டி, மற்றொரு கரத்தால், தரையில் ஊன்றிய கதையைத் தொட்டுப் பீதாம்பரதாரியாக விளங்குகிறார் பெருமாள். நிமிர்ந்த மார்பை நெடிய ஆரங்களும், முப்புரி நூலும் அணி செய்கின்றன. திருமால்

'கொன்றை வனப் பெருமாள்' எனக் கூறப் பெறுகின்ற திருமாலின் முகப் பொலிவு கருணையும், பரிவும்கொண்டு கவர்ச்சிமிக்கதாய் விளங்குகின்றது. இதழ்களில் வெளிப்படும் மென்முறுவல், இதயங்களை ஈர்க்கும் காந்த சக்தியுள்ளதாய்க் காணப்படுகிறது! இரு புறமும் தேவிகள் உள்ளனர். திருமகள் வலது புறம் தாமரை மலர் தாங்கி, பத்ம பீடத்தில் திரிபங்க நிலையில் நிற்கிறார். கிரீடமகுடமும் மார்புக்கச்சமும் காணப்படுகின்றன. மார்பில் ஆரங்கள் விளங்குகின்றன. இடதுபுற பத்ம பீடத்தில் பூமகள் நீலோத்பல மலர் ஏந்தியுள்ளார். வரிவரியான, வேலைப்பாடுடன்கூடிய ஆடை அணிந்துள்ளார்: மார்பில் ஆரங்கள விளங்குகின்றன இரு தேவியரின் செப்புத் திருமேனிகளும் கலையழகோடு திகழ்கின்றன. இத்திருமேனிகள் கி.பி. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் கணிப்பு.

தேவிகள் இருவர்

சிவபரம்பொருளும், அன்னை சிவகாமி அன்னையும் பத்மாசனத்தில் அமர்ந்திருக்க இடையில் குமரன் நின்ற திருக்கோலமாய் இருகரங்களிலும் தாமரைமலர் தாங்கிக்காட்சி தருகின்றான். பரம்பொருளோ நான்கு திருக்கரங்களை உடையவராக விளங்குகின்றார். பின்னிரு திருக்கரங்களில் மழு, மான் தாங்கி, முன்னிரு திருக்கரங்களில் அபய, வரத முத்திரை காட்டிப் புன்னகை தவழ வீற்றிருக்கும் சிவபெருமானை, மான் துள்ளலுடன் நோக்கியுள்ள நேர்த்தி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது! செவிப் பூ, மகர குண்டலம், பத்ர குண்டலம் ஆகியவை செவிகளில் அணிந்து, ஆரங்கள் பலவும், முப்புரி நூல் ஒன்றும் மார்பில்விளங்க, ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கின்றார். இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ள

சோமாஸ் கந்தர்

பெருமானுக்கு ஏற்றாற் போல, இறைவி, வலது காலை மடித்து, இடது காலை தொங்க விட்ட வண்ணம் வீற்றிருக்கின்றாள். இந்த செப்புச் சிலைகள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென ஆய்வாளர் கருதுகின்றனர்.

''நம் பொருட்டு, ஈன்ற தந்தை விழ எறிந்தாய்! அடுத்த தந்தை நாமே இனி உனக்கு'' எனச் சிவபெருமான் தமக்குச் செல்வப் புதல்வனாக ஏற்றுக் கொண்ட சண்டேசுவரர் செப்புத் திருமேனி, கண்டு மகிழ்கிறோம் உயரமான சிற்பர். மலர்ந்த முகப் பொலிவும், அகன்ற தோள் வலிவும், நீண்டிருக்கும் செவிகளும் கூப்பிய கரங்களுடன் தோற்றம் தரும் சண்டேசுவரர். மகுடத்தின் உச்சியில் கொன்றைமலர் ஒன்று வைக்கப்பெற்றுள்ளது. சண்டேசுவரரின் பக்தியைப் போற்றி, இறைவன் அவருக்குக் கொன்றை மலரைச் சூட்டியதாகப் பெரிய புராணம் தெரிவிக்கும்.

சண்டேசுவரர்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதலாக அண்மைக் காலம் வரையுள்ள பல்வேறு கலைப் பணிகளில் விநாயகர், உமாசந்திரசேகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, சுகாசனர், தேவியர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் முதலிய பல செப்புத் திருமேனிகளை, திருப்புத்தூர் திருத்தளியில் தெய்வத் தன்மை கொண்ட கலை நுணுக்க அறபுதங்களாகக் கண்டு களிக்கிறோம்.

கலை அற்புதங்கள்

## 8 திருமேனிகள் அமைந்த திருத்தளிப் புராண வரலாறு

அரவணை மேல் பள்ளி கொண்டிருந்த, ஆழி மழைக் கண்ணர், அனந்த சயனர், அருள் வழங்கி அடியவரை ஆட்கொள்ளும் அமரர் பெருமான் எழுந்து அமர்ந்தார். ஆராத மனக் களிப்பை அவரது திருமுகப் பொலிவில்

திருமாலும் இலக்குமி தேவியும்

கண்டு கொண்ட, அருகிருந்த இலக்குமிதேவி மென் முறுவலுடன் மெல்ல வினவினாள்.

''பெருமானே! எதை எண்ணி இப்படி மகிழ்கின்றீர்கள்? அடியாளும் அதைஅறிந்துகொள்ளலாமா?''

''தேவி! நீ வினவிய பின், உன்னிடம் சொல்லாமல் இருக்க இயலுமா? சொல்கிறேன். திரிபுர சங்கார வெற்றிக் களிப்பில், இறைவன் ஆடிய கூத்தினை மறுமுறை காண மனம் கொண்டாள் தங்கைகௌரி! இறைவன் அவள் வேண்டுதலுக்கு மனமிரங்கி மீண்டும் அந்த வெற்றித்தாண்டவத்தை, வீரதாண்டவத்தை ஆடிக்காட்டி அருளினார். எங்கேதெரியுமா?'' எனக் கேட்டார் மாதவர், மதுசூதனர்.

இலக்குமியின் பெரு விருப்பம்

இலக்குமிதேவி புன்னகைத்தவாறே, 'எங்கே என்று என்னைக் கேட்டால்? கௌரி பார்த்து மகிழ்ந்தவள்.... அவளைக் கேட்டால் எங்கேயென்று கூறுவாள். காணாத என்னிடம் கேட்டால்..? சரி, எங்கேயென்று நீங்களே சொல்லுங்கள்'' என வேண்டினாள். ''தேவி! உயிர்களைப் பேணவும், காக்கவும் கூடிய பெருந்தாண்டவம் அது! காணக் கொடுத்து வைத்தவள் கௌரி! கௌரி கண்டு மகிழ்ந்ததால், அதனை 'கௌரி தாண்டவம்' என்பர். கௌரி தாண்டவம் திருப்புத்தூர் திருத்தளியின் சிற்சபையிலே நிகழ்ந்தது....'' எனத் திருமால் சொல்லிக் கொண்டிருந்த போதே, இலக்குமி இடையே மறித்து, ''பெருமானே! கொடுத்து வைத்தவள் கௌரி என்றீர்கள்! ஏன் அடியாளும் அத்தகைய பாக்கியத்தை அடையக் கூடாது? ஆம்! நானும் அந்த பெருமைக்குரிய பெருந் தாண்டவத்தைக் கண்டு மகிழ வேண்டும்! அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' என எழுந்து நின்றாள் இலக்குமிதேவி.

இலக்குமிதேவியின் ஆசையை, விருப்பத்தை பெருங்கருணைப் பேரருளாளனாகிய இறைவன், இரங்கி, நிறைவேற்றி வைப்பானென்றும், இறைவனது திருவருட் கருணையைப் பெற்று, தாண்டவம் காண, இலக்குமிதேவி திருப்புத்தூர் சென்று வழிபட வேண்டுமென்றும் திருமால் கூறியருளினார்.

பாற்கடலில் பரமனை வணங்கி விடைபெற்று, நேராகத் திருப்புத்தூருக்கு வருகை புரிந்த இலக்குமிதேவி, காரையூரிலிருந்து திருத்தளி நாதரை வேண்டி முன்னூறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தாள். இலக்குமி வழிபட்டுத் தவமிருந்ததால் காரையூர் மூர்த்திக்கு 'ஸ்ரீவந்தியநாதன்' எனும் திருப்பெயர் அமைந்தது. அசரீரி வழிநடத்த, மூலமூர்த்தியாகிய சுயம்புலிங்கத்தைத் தரிசிக்கத் தேவி திருப்புத்தூரைச் சென்றடைந்தாள்.

**இலக்குமி திருத்தளி வருகை**

திருப்புத்தூர் வந்த இலக்குமிதேவி, ஸ்ரீதளி தீர்த்தக் குளத்தின் மேல் கரையில் வீற்றிருந்து வழிபட்டாள். பின் அங்கிருந்து வடகரைக்கு வருகை தந்து, நேமி தீர்த்தத்தில் தீர்த்தமாடியபோது, சக்கரம் கண்டு, மனம் களித்தாள். அப்போது அங்கோர் அற்புதம் நிகழ்ந்தது! பருந்து ஒன்று, சீதளிக் குளத்தில் மீன் ஒன்றைக் கவ்விப்பிடித்து விண்ணேறியது. பருந்தின் அலகில் துடித்தமீன் துள்ளிக் குளத்தில் விழுந்தது. மீனை இழந்த பருந்து, மிக வேகமாகக் குளத்துள் பாய்ந்தது. சீதளித் தீர்த்தம் பருந்தை நனைத்தது. தீர்த்தம் பருந்தின் உடலை நனைத்ததும், அதிசயம் ஒன்று அங்கே நிகழ்ந்தது!

**அதிசயக் காட்சி**

பருந்து அழகிய மனித வடிவம் கொண்டு சீதளியின் வடகரையில் நின்றது! இதனைப் பார்த்த இலக்குமிதேவி, "நீ யார்?" எனக் கேட்டாள்.

"தேவி! நான் மாளவதேசத்து மன்னன் மணிப்பிரகாசன்!" என்றான் அந்த மனிதன்.

"அப்படியா? நீஏன் பருந்தாகத் திரிந்தாய்?" என வினவினாள் தேவி.

மன்னன் தன் வரலாற்றைக் கூறினான்.

மாளவ தேசத்து மன்னன்

மாளவ தேசத்து மன்னன் மணிப்பிரகாசன் உணவு உண்டு கொண்டிருந்த போது, பசியால் வாடிய முனிவர் ஒருவர், அவன் பக்கத்தே வந்து உணவு வேண்டினார். "என் பசிக்கு மட்டுமே இங்கு உணவு உள்ளது! உன் பசிக்கு இங்கே உணவு இல்லை! எனவே நீ இங்கிருந்து ஓடிவிடு!" என்றான் மன்னன். மீண்டும் வேண்டினார் முனிவர். சினம் கொண்டான் மன்னன். சிறிய சொல்லால் முனிவரை விரட்டினான்! வந்தது முனிவருக்குக் கோபம்! "எங்கும், என்றும் பருந்தாய்த் திரிவாய்! பசித்துத் திரிவாய்! அகப்படும் உணவும் அங்கங்கே நழுவும்! பசியால் வாடிப் பருந்தாய்த் திரிவாய்!" எனச் சாபம் கொடுத்தார். பருந்தாய் மாறிய மன்னன் முனிவரை மன்னிக்க வேண்டினான். மனம் இரங்கிய முனிவர் "திருப்புத்தூரில் இலக்குமியைத் தரிசிக்கின்றபோது, உன் பருந்து உடல் சிறந்ததீர்த்தமாகிய சீதளியில் நனைந்திடும் போது, நீ மீண்டும் மனித உருக்கொள்வாய்!" எனச் சாப விமோசனம் அருளினார் இலக்குமி தேவியைத் திருப்புத்தூரில் தரிசித்ததாலும், பருந்து உடல் சீதளியின் தீர்த்தத்தில் நனைந்ததாலும் மனித வடிவம் கொண்ட மன்னன் மணிப்பிரகாசன் இலக்குமியைத் தொழுது போற்றி, விடை பெற்று மாளவ தேசம் சென்றான்.

பிருகு முனிவரின் சினமும் குணமும்

ஒருமுறை தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடும் போர் நிகழ்ந்தபோது அசுரர்கள் சிலரை பெருந்தவ சீலராகிய பிருகு முனிவரின்

மனைவி சில காலம் மறைத்து வைத்திருந்தாள். இதனை அறிந்த திருமால் பிருகு முனிவரின் மனைவியைக் கொன்றார்.

மனைவியை இழந்த முனிவர், பெருஞ்சினம் கொண்டார்; திருமாலைச்சபித்தார். எனினும் குணமெனும் குன்றேறி நின்றபெருந்தகையல்லவா பிருகு முனிவர்? கணப் பொழுதில் தம் சினம் அவித்துக் கருணை காட்டினார்.

திருமால் திருப்புத்தூர் சென்று, திருத்தளிநாதரை வழிபட்டால் சாபம் நீங்குமெனச் சாப விமோசனம் அருளினார் பிருகு முனிவர்.

திருமால் வருகை

திருத்தளிநாதரை வழிபட திருப்புத்தூர் வருகைதந்த திருமால், கொன்றைவனமாகப் பரவிக் கிடந்த பகுதியின் வடபால் ஓரிடத்திலிருந்து வழிபட்டார். திருமால் வழிபட்ட இடம் என்பதால், இப்போதும் அவ்விடம் 'அரிபுரம்' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

திருமாலின் வழிபாட்டை மனம் கொண்ட திருத்தளிப் பெருமான், திருமால் முன் தோன்றி, பெருந்தவசீலர் பிருகு முனிவரையும் வரவழைத்துச் சாப விமோனம் அளித்த பெருங்கருணைத் திறத்தை, திருமால் சொல்லத் திருமகளாகிய இலக்குமி தேவி கேட்டிருக்கிறாள். அந்தப் பெருங்கருணையை நினைவில் கொண்டு நெகிழ்ந்த இலக்குமி தேவி, ஸ்ரீ தளியின் வட கரையிலிருந்து தென் திசை நோக்கி வந்து,கௌரியின் பொருட்டுத் தாண்டவம் அருளிய பெருமானை - கௌரீசனை வழிபட்டாள். பின் மூல மூர்த்தியின் வடபால் பூமிதேவியுடன் வீற்றிருந்தருளும் முகுந்தனை வணங்கினாள். பெருந் தவ சீலர் பிருகு முனிவரையும் கண்டு தரிசித்தார்.

இலக்குமி தேவியின் தவ வழிபாட்டை மன மகிழ ஏற்றுக் கொண்ட பெருமான், தளராத் தாகம் கொண்ட அவன் விருப்பத்தை, களிப் போடும், கருணையோடும் நிறைவேற்றி அரு ளினார். ஆம்! உயிர்களைப் பேணிக் காக்கும் தாண்டவத்தைகௌரி கண்டுஉவந்த கௌரி தாண்டவத்தை-இலக்குமி தேவி காணவும், கண்டு பெரும் பேறு பெறவும் மீண்டும் ஆடி யருளினார் பெருமான்! இலக்குமி மகிழ்ந்து நெகிழ்ந்து உருகித் தரிசித்தாள். இலக்குமி தேவி கண்டு மகிழ ஆடியதால் 'இலக்குமி தாண்டவம்' என்ற பெயரும் பெருமானின் ஆடலுக்கு ஏற்பட்டது. திருப்புத்தூர்த் திருத் தளியின் சிற்சபையில், சிவ பரம்பொருள் - கௌரி காணவும், இலக்குமி பேறு பெறவும், ஆடியருளிய தாண்டவச் சிறப்பை அமுதத் தமிழால் அற்புதமாகச் சித்திரித்துள்ளார் - திருப்புத்தூர்ப்புராணம்அருளிய சொக்கலிங்க ஐயா. கௌரி தாண்டவத்தைத் திருப்புத்தூர் சிற்சபையில் தரிசித்தால் நன் மக்கட் பேறும் செல்வப் பெருக்கமும், கல்விப் பேறும் உண் டாகும் என்கிறது புராணம்.

இலக்குமி காண மீண்டும் தாண்டவம்

திருமால், பிரம்மா, கௌரி, இலக்குமி, வால்மீகி, பிருகுமுனிவர், திக்பாலர், சயந்தன் குஜகேசன், பூமிதேவி, பைரவர், குல மறை யோர் குழு, பருந்தாக இருந்த மணிப்பிர காசன் ஆகியோர் திருத்தளிக்கு வருகை புரிந்து, மூல மூர்த்தியை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

வழிபட்டோர்

## 9. வரலாறு காட்டும் கல்வெட்டு அமைப்புகள்

கல்லில் எழுத்துக்களைப் பொறித்துச் செய்தி களை வெளிப்படுத்தும் முறை பண்டைக் காலம் முதலாகவே தமிழ்நாட்டின் பழக்க மாக இருந்து வருகின்றது. மறைந்து விடாது

என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய தன்மை கல்லில் வெட்டிய எழுத்துகளுக்கு உண்டல்லவா? எனவே சேதாரமில்லாது கல்லில் எழுதிய செய்திகள் வரலாற்றுக்கு ஆதாரமாக இருந்து வருகின்றன. கால வளர்ச்சியில் செய்திகளைத் தெரிவிக்கச் செப்புத் தகடுகளில் எழுதி வைக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. அவைகள் 'செப்புப் பட்டயங்கள்' எனக் கூறப்பெறுகின்றன.

சேதாரம் இல்லாத செய்திக்கு ஆதாரம்

பெரும்பான்மையும் திருக்கோயில்களில் சுவர்களிலும், படிகளிலும், தூண்களிலும் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகள், மன்னர்கள் ஆண்ட, பிறந்த காலங்களையும், வீரதீரச் செயல்களையும்,வெற்றிப்பெருமிதங்களையும் கோயில்களுக்கு வழங்கிய கொடைகளையும் குறிப்பிட்டுக் கூறுவதாய் இருப்பினும் அரசிகள், அரசு அதிகாரிகள், கோயில் அலுவலர்கள், குறுநிலம் ஆண்டோர், குடிமக்கள் ஆகியோரின் கொடை உள்ளங்களையும், கல்வெட்டுகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன, இத்தகைய கல்வெட்டுகள் நூற்றுக்கும் மேற்பட்டுத் திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் திருக்கோயிலில் கி.பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கி இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

திருப்புத்தூர்த்திருத்தளியில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்து வெளியிடும் அரிய முயற்சி 1908ஆம் ஆண்டு முதல் அரசுத்துறைக் கல்வெட்டுஆய்வாளர்களால் கையாளப்பட்டு வருகிறது. அண்மைக் காலத்தில் திருச்சி டாக்டர் மா. இராசமாணிக்கனார் கல்வெட்டாய்வு அமைப்பால்- டாக்டர் இரா. கலைக்கோவன் முன்னின்று- அறுபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் படி எடுக்கப்பெற்று, படிக்கப்பெற்று வரும் செயற்கரிய செயல்பாராட்டிற்குரியது.

கல்வெட்டுகள் படிக்கப்பட்டு வரும் அரிய முயற்சிகள்

பேராசிரியர் வள்ளி சொக்கலிங்கம் 'திருப்புத்தூர்' எனும் ஆராய்வு நூலில் இக்கல்வெட்டுகள் பற்றிப் பகுத்தும், தொகுத்தும் வெளியிட்டுள்ள பாங்கு போற்றற்குரியது.

வரலாற்று விடிவெள்ளிகளாக விளங்கும் கல்வெட்டுகள், ஆயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட திருப்புத்தூர்ப்பகுதி மக்களின் வாழ்வியலை, பண்பாட்டை, இறை நெறியை, கொடை உள்ளத்தைக் காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன.

ஆக்க நிலை அழிவு நிலை

கருவறை, அதிட்டானச் சுவர்ப் பகுதிகள், முதல் திருச்சுற்று மாளிகைச் சுவர்கள், பைரவர் சந்நிதிக்கு முன்னுள்ள மண்டபம், இரண்டாம் திருச்சுற்றுச் சுவர்கள் ஆகிய இடங்களிலெல்லாம் காணப்பெறும் கல்வெட்டுச் செய்திகள் கோயில் பராமரிக்கப்பெற்ற ஆக்க நிலைகளையும், முகமதியர், சிங்களர், போசளர், படையெடுப்புக்கு இடமாகிய அழிவு நிலைகளையும் உணர்த்துவனவாய் உள்ளன. சில கல்வெட்டுகள்மன்னர்களின் ஆணையை வெளியிடுவனவாகஅமைக்கப் பெற்றுள்ளன. இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், மற்றவை தமிழ், கிரந்தம் ஆகிய எழுத்துகளிலும் உள்ள கல் எழுத்துகள் மகத்தான வரலாற்று வரிவடிவங்களாகக்காட்சிதருகின்றன. திருப்புத்தூர் எட்டாம் நூற்றண்டுக்கு முன்னமேயே 'பிரமதேயம்' ஆக இருந்ததைக் கல்வெட்டுச் செய்திகள் புலப்படுத்துகின்றன. கொழுவூர் கூற்றத்துப் பிரமதேயம்' என்றும், 'கொழுவூர் கூற்றத்து மீகுண்டாற்றுப்பிரமதேயம்' என்றும், 'கேரள சிங்க வளநாட்டுப் பிரமதேயம்' என்றும் 'பாண்டி மண்டலத்து கேரள சிங்க வளநாட்டுப் பிரமதேயம்' என்றும் திருப்புத்தூர் குறிக்கப்பெற்றுள்ளது. நாட்டுப்பிரிவுகள் 'கூற்றம்', 'வளநாடு', 'சீர்மை', என்றெல்லாம் இருந்துள்ளன.

கல்வெட்டுகளில் 107 ஊர்கள் பேசப்படுகின்றன அவைகளில் 'குடி' என முடியும் ஊர் 23 'ஊர்' என முடியும் ஊர் 48, 'மங்கலம்' என முடியும் சில ஊர்கள். குறிக்கப்பெறும் ஊர்களின் பெயர்கள் பெரும்பான்மையும் இன்று வரை மாறாது உள்ளமை வியத்தற்குரியன.

பாண்டியர் சோழர் விஜய நகர மன்னர்

முற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில்தான் வட்டெழுத்து இடம் பெறுகின்றது. முதல் சுற்றின் வடமேற்கில், கொன்றை மரத்தடியில் பாதுகாப்பாக வைத்திருக்கும் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் 'மாறஞ்சடையன்' 'வரகுணமாராயன்' எனும் இரு பாண்டியர்களின் பெயர்களைக் குறிக்கின்றன. வரகுண மாராயன் என்பவன் இரண்டாம் வரகுணனென ஆய்வாளர் கருதுகின்றனர். பிற்காலப் பாண்டியர் காலத்தில் அறுபதுக்கு மேற்பட்ட கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. சோழர்களின் கல்வெட்டுகள் இரண்டே இரண்டுதான் இங்கு இடம்பெற்றுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. கி பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின், விஜய நகர மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்டனர் அல்லவா? இவர்களின் கல்வெட்டுகளும் திருத்தளியில் உள்ளன.

புலவர்கள்

புலவர்கள் சிலர் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். 'திருவிளையாடற் புராணம்' அருளிய புலவர் பெருமான் பெரும்பற்றப் புலியூர் நம்பிக்கு திருத்தளிநாதர் கோயில் அர்ச்சகர்கள் சில நிலங்களை அளித்துள்ள செய்தி கல்வெட்டொன்றில் காணப்படுகிறது. 'திருவம்பலம் உடையார் மறைஞான சம்பந்தர்' எனும் புலமைச் சான்றோர், ஓங்குகோயில் உறைவார் மூர்த்தியின்மேல்அரிய 'புராணம்' ஒன்றை ஆக்கி அளித்ததாகவும், அதன் பொருட்டு அச்சான்றோருக்கு, மன்னாரு மங்கலம் என்ற ஊரில் கோயிலைச் சேர்ந்த

ஐந்து மா நிலம் பரிசாக வழங்கப்பட்டதாகவும் அறிகின்றோம்.

'தலைக்கோலிகள்' 'தளிச்சேரிப் பெண்டுகள்' 'பதியிலார்' என்றெல்லாம் குறிக்கப் பெறும் தேவரடியார்கள் கோயிலில் திருவலகிடுவதும், திருமெழுக்கிடுவதும், மலர் தொடுத்து வழங்குவதும் ஆகிய பணிகளைக் கொண்டிருந்தவர்கள். இத்தகைய தேவரடியார்கள் திருப்புத்தூர்த்திருத்தளியில் இருந்து வந்ததையும், அவர்களுக்காக நிலங்கள் மானியங்களாக விடப்பட்டதையும் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பதியிலார்

அறக்கட்டளைகளை உரிய வகையில் நிறைவேற்றாதவர்கள் அடையும் துயரங்களையும், தண்டனைகளையும் கல்வெட்டுகள் வெளிப்படுத்துகின்றன.

முதலாம் வரகுண பாண்டியன் (கி.பி. 782) இரண்டாம் வரகுணன்(கி.பி. 862) திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீவல்லபதேவர் (கி.பி. 11ஆம் நூற்றாண்டு) மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் (கி.பி. 12 ஆம் நூற்றாண்டு) சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 12ஆம் நூற்றாண்டு) சுந்தர பாண்டியத் தேவர் (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) வீரபாண்டியன் (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) விக்கிரம பாண்டியத் தேவர் (கி.பி. 14 ஆம் நூற்றாண்டு), விஜயநகர மன்னர்கள் (கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலிருந்து) விஜய நகர மன்னர்களுககு உட்பட்டுப் பாண்டிய நாட்டை ஆண்ட விஸ்வநாத நாயக்கன், தும்பிச்சி நாயக்கன், வெங்கல நாயக்கன், பெரிய ராமப்பய்ய நாயக்கர் முதலிய மன்னர்களும், சோழ வேந்தர்களான முதலாம் இராஜராஜன், ராஜகேசரிவர்மன், வீர ராஜேந்திரன் ஆகியோரும் கல்வெட்டுகளில்

கல்வெட்டில் மன்னர்கள்

காணப்பெறும் மன்னர்களாகத் தெரிய வருகின்றனர்.

'அருப்பாக்கிழான்' 'நரலோக வீரன்' என்றெல்லாம் பட்டங்கள் பெற்றிருந்த காலிங்கராயன், ஆடல் வல்லான் நடராஜப் பெருமானின் சந்நிதியிலுள்ள எழிலும், எடுப்புமிக்க கலா மண்டபத்தை உருவாக்கி அளித்துள்ள உயர் செயலை இரண்டு கல்வெட்டுகள் உயர்வாகத்தெரிவிக்கின்றன. காலிங்கராயன் முதல் குலோத்துங்கன் படைத் தளபதியாக வீற்றிருந்து பெரும் புகழ் கைக்கொண்டவன். நடராஜப் பெருமானிடத்து ஆழ்ந்த ஈடுபாடு உடையவன். சிதம்பரம் திருக்கோயிலில் பல்வேறு திருப்பணிகளை முன்னின்று ஆற்றி, பன்னலம் சிறக்கப் பக்தியில் திளைத்தவன்.

காலிங்கராயன்

குன்றக்குடிக்கு அருகிலுள்ள நேமம் என்ற சிற்றூரில் பிறந்த காங்கேயன் பாண்டிய அரசில் புகழ்மிக்கதோர் அரசியல் அதிகாரியாக விளங்கியிருக்கிறான். திருத்தளியாண்டார் கோயிலில் திருப்பதிகம் விண்ணப்பிப்பார்க்கு இறையிலி நிலங்களை இவன் அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. காங்கேயன் ஆணைகளை திருத்தளிநாதர் கோயிலில் பல கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பெருமையும், பெருஞ்செல்வாக்கும் பெற்றிருந்த காங்கேயனைப்பற்றி ஒரு 'பிள்ளைத் தமிழ்' நூல் உண்டு. கல்வெட்டில் நேமம் 'நியமம்' எனக் குறிப்பிடப்பெறுகிறது பதின்மூன்றாம் நூற்றாண்டில், திரிபுவனச் சக்கரவர்த்திகள் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் காங்கேயன் வாழ்ந்திருக்கலாமென ஆய்வாளர் கருதுகின்றனர்.

காங்கேயன்

கைலாசமுடைய நாயனார் கோயிலில் தேவரடியாள் ஒருத்தி, திருநாவுக்கரசு நாயனார் திருமேனியைப் பிரதிஷ்டை செய்தாள்.

என்றொரு செய்தி கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

இத்தகைய சுவையான. பயனுள்ள செய்தி களைக் கொண்ட கலம்பகமாகத் திருத்தளிக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. பெரும்பான் மையும் கொடைச் சிறப்புக்களைக் கொண்ட செய்திக் குவியல்களாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன. முழுமையும்படிக்கப்பெற்று பாங்குறப் பகுத்து அச்சிடப் பெறுகின்ற போது வியப்பிற்குரிய பல செய்திகள். நிகழ் வுகள் தெரிய வரலாம். அவை சேதாரங்கள் இல்லாத வரலாற்று ஆதாரங்களாக வடிவம் கொள்ளலாம். சரிந்திருக்கும் சரித்திர வடி வத்திற்கு, அவை சான்றுகளாகி சரியான ஊன்றுகோல்களாகவும் உருவம் கொள்ள லாம்.

சான்றுகளே ஊன்றுகோல்

## 10. அமைப்பும் விழாவும் ஆலய நிர்வாகச் சிறப்பும்

அறம் விளங்கும் கொள் கலமாய்,அருள் விளை யும் நிலைக் களமாய், தவத் திறம் திகழும் திருவுருவாய்த் திருவண்ணாமலையில் அவத ரித்த தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள், பதினான்காம் நூற்றாண்டின் புலர் காலைப் பொழுதில், சிவம் பெருக்கும் திருமடம் ஒன்றைத் திருவண்ணாமலையில் நிறுவினார்கள். அறச்சிறப்பும்,அருட்சிறப்பும் தவச்சிறப்பும் நிரம்பிய அருளாளர் தெய்வ சிகாமணி தேசிக சுவாமிகளின் ஞானச்சிறப் பும், கருணைச் சிறப்பும் மேவியதிருமடத்தை மக்கள் 'திருவண்ணாமலை ஆதீனம்' என அழைத்து மகிழ்ந்தனர். ஆதீனக் குரு முதல் வராய் விளங்கிய சுவாமிகள், ஜீவ சமாதி அடைந்த பின்,வழி வழியாக அருளாளர்பலர்

திருவண்ணாமலை ஆதீனம்

ஆதீனத் திருமடத்தில் அருளாட்சியையேற்று, அறம் வளர்த்துச் சிவம் பெருக்கினர். பதினே ழாவது குரு மூர்த்தியாய் ஆதீனத்தின் அருளாட்சி ஏற்று எழுந்தருளிய நாகலிங்கதேசிக சுவாமிகள் பதினேழாம் நூற்றாண்டில் சேது யாத்திரைக்காகத் திருவண்ணாமலையிலிருந்து புறப்பட்டு, இராமநாதபுரத்து 'திருச்சுழியல்' எனும் ஊரில் வந்துதங்கினார்கள்.

சேதுபதி அளித்த ஐந்து கோயில்

திருவண்ணாமலை ஆதீனகர்த்தராக விளங்கிய நாகலிங்க தேசிக சுவாமிகளின் திருவருள் திறமறிந்த இராமநாதபுரம் சேதுபதி, திருச்சுழியக்கு வருகை புரிந்து சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகளின் திருத்தொண்டும், திருவருளும் சேதுநாட்டுக்குப்பயன்பட, சுவாமிகளைச் சேதுச்சீமையிலேயே தங்கி விடுமாறு மிகப்பணிந்து வேண்டினார் சேதுபதி மன்னரின் வேண்டுதலை மறுக்க முடியவில்லை சுவாமிகளால்! தமது வேண்டுதலுக்கு உடன்பட்ட சுவாமிகளின் திருவடிகளில் சேது மன்னர் பொன்னும் மணியும் காணிக்கையாக வைத்து வணங்கியதோடு, தமது நிருவாகப் பொறுப்பிலிருந்த ஐந்து திருக்கோயில்களை சுவாமிகளின் அருளாட்சிக்குவழங்கிவிடுவதாக வாக்களித்தார்.

அருளாட்சித் தலைப்பதி

சேதுபதி மன்னர் வாக்களித்து வழங்கிய பிரான்மலை, திருப்புத்தூர், திருக்கோளக்குடி, தேனாட்சியம்மன் கோயில், குன்றக்குடி ஆகிய ஐந்து திருக்கோயில்களின் அறங்காவலராக கி.பி. 1690 இல் நாகலிங்க சுவாமிகள் அருளாட்சி மேற்கொண்டார்கள் சேதுச்சீமையில் புகழார்ந்த திருமலையாய் விளங்கிய பரம்புமலையை (பிரான்மலை) அறங்காவல் அருளாட்சித் தலைப்பதியாய்க் கொண்டார்கள் சுவாமிகள். முன்னூறு ஆண்டுகளாக பிரான்மலை வகை ஐந்து கோயில்களின் அருளாட்சிப் பொறுப்பை

நாகலிங்க சுவாமிகளின் வழி வழி வந்த அருளாளர்கள், ஆதீன கர்த்தர்களாக வீற்றிருந்து ஏற்றுத் திருவருள் செய்து வருகின்றார்கள். மருது பாண்டியர்காலத்தில் (1778) பிரான்மலை வகை ஐந்துகோவில் தேவஸ்தானத் தலைப்பதி, பிரான்மலையிலிருந்து குன்றக்குடிக்கு மாற்றப் பெற்றது.

தவத்திரு அடிகளார்

குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனக் குருமூர்த்தியாய் – 45வது மகாசன்னிதானமாய் திருப்பெருந்திரு அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார்) 1952இல் எழுந்தருளி, பிரான்மலை வகை ஐந்து கோயில் தேவஸ்தானத்தை நாற்பது ஆண்டுகளாகப் புகழோடும் பொலிவோடும் அருளாட்சி செய்தருளி வருகின்றார்கள்.

திருப்பணியும் திருக்குடமுழுக்கும்

முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருப்புத்தூர் திருத்தளியில் அருள் பாலித்து வரும் பெருமானிடத்தும், ஆண்ட பிள்ளையார் பைரவமூர்த்தியிடத்தும்தவத்திரு அடிகளார் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். பாடல் பெற்ற பாண்டிப்பதி பதினான்கில் ஒன்றாகவும், ஆடல் பெற்ற திருத்தலங்கள் ஆறில் ஒன்றாகவும், கோயில் அமைப்பில் தனித்தன்மையும், கொண்டுள்ள சிற்பவேலைபாட்டில் தனிப்பெருமையும் பெற்றுத்திகழும் திருத்தளிக்கு முழுமையாகத் திருப்பணி செய்யத் தவத்திரு அடிகளார் திருவுள்ளம் கொண்டார்கள் காலம் கனிந்தது! பல நூற்றாண்டுகளாகச் செய்யத்தவறிய திருப்பணி வேலைகள், கோயிலைச்சார்ந்த கிராமத்தார், கோயிற் பணிகளில் ஆர்வம் கொண்ட சிவாச்சாரியர், கோயில் வளர்ச்சியில் ஈடுபாடுள்ள குடி மக்கள் ஆகிய பெருமக்களின் ஒத்துழைப்போடு, அயலார் படையெடுப்பில் அழிந்து

போன இராஜகோபுரம் உள்பட, அனைத்து திருப்பணிகளையும் செய்வித்தருளி, 24 8-92 இல் திருக்குட முழுக்கும் பெருவிழாவை நிகழ்த்திட உள்ளார்கள்.

திருப்புத்தூர் திருக்கோயிலில் நிகழும் 'நாள் வழிபாடு'களையும், பிரதோஷம் போன்ற 'திங்கள் வழிபாடுகளையும், ஆண்டுதோறும் நிகழ்ந்துவருகின்ற 'திருக்கோயில் திருவிழா'க் களையும் மிகச் சிறப்பாகத்திட்டமிட்டு' குன்றக்குடி ஐந்துகோயில் தேவஸ்தானத் தார் நடத்தி வருகின்றார்கள்.

ஆகமங்களின் வழியே அமைந்த பூசனைகள்

நாள் வழிபாடு பக்தி ஞான வகையைச் சார்ந்து, காமிகாமம், காரணாகமம் முதலிய ஆகமங்களின் வழியில், திருத்தளி நாதருக்கும் சிவகாமசுந்தரி அம்மைக்கும், பைரவமூர்த்திக் கும் நடராஜர் சோமாஸ்கந்தருக்கும் நான்கு காலப்பூசனை நாள்தோறும் நடைபெற்றுவரு கின்றது காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட் சை, அர்த்தசாமம் என நான்குகாலப்பூசனை. ஒவ்வொரு காலத்திலும் திருமஞ்சனமாட்டி, ஆடைகள் மலர்கள் அணிவித்து, திருமுறை களை ஓதுவார் பாடிட, மங்கல வாத்தியம் முழங்க நெய்வேத்தியம் படைத்து தீபாரா தனைகள் நிகழுகின்றன. தினமும் அர்த்த சாமப் பூசனையின் போது பைரவர் சந்நிதி யில் மங்கல மேள வாத்தியம் வாசிப்பதில்லை. யோக பைரவர் ஆயிற்றே? பெருமானது யோகநிலை கலைந்து விடக் கூடாதென்பதற் காக இந்த மரபு கையாளப்பட்டு வருகின்றது. பிரதோஷ நாளன்று நந்திக்கும், இறைவனுக் கும் ஒரே நேரத்தில் தீபம் காட்டப்படுகிறது.

"கருக்கம் எல்லாம் கமழும் பொலிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்"

என ஞான சம்பந்தப் பெருமான் சிறப்பித்துப் பேசிய திருப்புத்தூரின் திருத்தளிநாதர் திருக் கோயிலில் ஆண்டுதோறும் பல விழாக்கள் நிகழ்ந்து வருகின்றன.

சாப விமோசனம் பெற்ற இந்திரன் மகன் ஜயந்தன் ஆண்டின் சித்திரை மாதத்துமுதல் வெள்ளியன்று திருத்தளிக்கு வருகை தந்து, பைரவரை வழிபடுவதாக ஓர் ஐதீகம். அந்த நாளில் மிகச் சிறப்பாக 'ஜயந்தன் விழா' ஆண்டுதோறும் கொண்டாடப்பெற்று வருகின்றது. அன்று பைரவரை திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்கின்றனர். மக்கள் பயபக்தியுடன் திரளாகக் கலந்து கொள்ளும் புகழார்ந்த திருவிழா இது.

ஜயந்தன் விழா

வைகாசிமாதத்தில் நடைபெறும் 'விசாகப் பெருந்திருவிழா' பிரமோற்சவமாகக் கருதப் படுகிறது. பத்து நாட்கள் நடைபெறும் பிரமோற்சவத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சோமாஸ் கந்தர், அம்பாள், சண்டிகேசுவரர் ஆகிய ஐம்பெரும் மூர்த்திகளைத் திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்கின்றனர். இத் திருவிழாவின் பத்து நாள்களும், திருப்புத்தூரிலுள்ள பூமாயி அம்மன் கோயில் பட்டர், 'லவண்டை' அடித்துத் திருத்தொண்டாற்றுவது வழக்கமாக உள்ளது. பூமாயி அம்மன் கோயில்,திருத்தளிநாதர் கோயிலின்உட்கிடக்கையாகஇருந்திருக்க வேண்டுமென இத்திருத் தொண்டு உறுதிப்படுத்துகிறது. இப்பட்டர்களுக்குக் காப்புக்கட்டும்போதும், அவிழ்க்கும் போதும் பரிவட்டம் கட்டுகிறார்கள். விநாயகரை பையூர் தொண்டர்களும், சண்டிகேசுவரரை மெய்யப்பட்டி, தெமமாப்பட்டுத் தொண்டர்களும்,அம்பாளை வயிரவன்பட்டித் தொண்டர்களும், சோமாஸ் கந்தரை தம்பிபட்டி, புதுப்பட்டித் தொண்டர்களும் திருவீதி உலாவில் எழுந்தருளச் செய்வித்துத் தாங்கி வருகின்றனர். மற்ற தெய்வ ஊழியங்களை வாணியம்பட்டி, திருத்தளிநாதர்பட்டித் தொண்டர்கள் செய்து வருகின்றனர்,

விசாகப் பிரமோற்சவம்

திருவிழாவின் 9ஆம் நாள் தேர்த்திருநாள். திருக்கோயிலைச் சேர்ந்த மூன்று தேர்கள் உள்ளன. அண்மைக் காலத்தில் செய்யப் பெற்றவை. (பழைய தேர்கள் எரிந்துவிட்டன வாம்.) நாட்டுக்கோட்டை நகரத்தார், தேர் களைச் செய்து, திருக்கோயிலுக்கு வழங்கி யுள்ளதாகக் கூறப்படுகிறது. விநாயகர், திருத் தளிநாதர், அம்பாள் ஆகிய மூர்த்திகள் திருத் தேர்களிலும், மற்ற கடவுளர் சப்பரங்களிலும் எழுந்தருளி திருவீதி உலா வருவர். விநாயகர் தேரைவிட அம்பாள் தேரும், அம்பாள் தேரை விட சுவாமி தேரும் பெரியவை. பத்தாவது நாள் தீர்த்தவாரி ஸ்ரீதளி ஊருணியில் நிகழும். இரவு தெப்பத் திருவிழாவாக அமையும்.

திருத்தேர்

திருக்கோயிலில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணியில் பிள்ளையார் சதுர்த்தியை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். புரட்டாசி நவராத்திரியில் அம்பாளுக்குஇலட் சார்ச்சனை நடைபெறும். ஒன்பதுநாள்களும் அன்னைக்கு விதம் விதமாகப் பல்வேறு அலங்காரங்கள் செய்து, தரிசித்து மகிழ்கின்ற னர். விஜய தசமியன்று பாலசுப்பிரமணியர் குதிரை வாகனத்தில் ஆரோகணித்து, ஸ்ரீதளி ஊருணி கீழ்க்கரையில் அம்பு போடுவார். கார்த்திகைத் தீபத்தன்று சொக்கப்பனை கொளுத்துதல் நிகழும். கார்த்திகைச் சோம வாரங்களில் 108சங்காபிஷேகம் நடைபெறும். மார்கழித்திருவாதிரைத் திருநாளில் நடராஜப் பெருமானுக்கு அதிகாலை 4மணிக்கு அபிஷே கம் நிகழும். அருணோதயத்தில் பெருமானை எழுந்தருளச் செய்வித்து, மணிவாசகப் பெரு மானுக்குச் சிறப்பளித்துப் பரிவட்டம் அணி விக்கின்றனர். தை மாதத்துப் பொங்கல் நாளில் ஐந்து கோயில் தேவஸ்தானத்திலி ருந்து இக்கோயிலுக்குப் பொங்கல் பானைகள் வரும். மடைப்பள்ளியில் ஏழு பானைகள் வைத்துப்பொங்கலிட்டு, இறைவனுக்குப் படைக்கப்படும். மாசி சிவராத்திரியில் ஐந்து

பல்விதமான திருவிழாக்கள்

ஜாமப் பூஜை, விடிய விடிய நடத்தி வைக்கப் படுகிறது.

திருமுறை விழா

வைகாசி விசாகப் பெருந்திருவிழாவில், ஐந்து நாள்கள் திருமுறை விழாவாகக் கொண்டாடப் பெறும். திருமுறை விழாவின் முதல் நிகழ்ச்சியாக, புலவர் பெருமக்கள் குழுமி, ஆய்வு நிகழ்த்தும் திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கம் கூடும்.

திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம்

அருட்செல்வர் அப்பர் சுவாமிகள் திருப்புத்தூர்த் திருப்பதிகத்தின் மூன்றாம் திருப்பாடலில் "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி, நற் கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்" எனும் அரிய செய்தியை அருளி உள்ளார்கள். இச்சிறப்பிற்குரிய தமிழ்ச் சங்கச் செய்தி, திருப்புத்தூர் திருப்பதிகத்தில்தான் முதன் முதலாக இடம் பெற்றுள்ளது. இதனைப் பெருமிதத்துடனும், பெருங் களிப்புடனும் எண்ணிப் பார்த்த புண்ணிய சீலர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், சங்கச் செய்தி விளக்கமுற்ற திருப்புத்தூரில் தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைக்கத் திருவுளம் கொண்டார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களை அகத்தில் கொண்டு, சமய நம்பிக்கையும் புலமைச் செறிவும் கொண்ட அறுபத்துமூன்று சான்றோர்களை முதன்மைப் புலவர்களாக அங்கம் வகிக்கும் தமிழ்ச் சங்க அமைப்பைத் 'திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம்' என, தவத்திரு அடிகளார் 1967-ல் நிறுவினார்கள். தமிழகத்தின் ஐந்தாவது தமிழ்ச் சங்கமாக, இந்த அமைப்பு வீறுகொண்டு, ஞானச் செருக்குடன் வளர்ந்து செழுமை பெற்றுள்ளது.

நிரந்தரத் தலைமைப் பொறுப்பை தவத்திரு அடிகளார் ஏற்றுள்ளார்கள். நிகழ்ச்சியின்

போது ஐந்து பெரும் புலவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பர். முதல் செயலாளராக பேராசிரியர் பா. நமசிவாயம் பொறுப்பேற் றிருந்தார். டாக்டர் ச. சவகர்லால் தற்போது செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

சித்தாந்தச். சிக்கல்கள், தத்துவச் சிக்கல்கள், சமய நடைமுறைச் சிக்கல்கள். சமுதாயச் சிக்கல்கள் ஆகியவற்றைத் தெளிவாகவும், விரிவாகவும் ஆய்ந்து, சங்கம் முடிவெடுக் கும். இலக்கிய இலக்கண ஐயங்களுக்கு விவாதித்துத் தெளிவூட்டும். புதிய வாழ்வு முறைக்குப் புதிய அணுகு முறையும், புதிய பார்வையும் எங்ஙனம் அமைய வேண்டு மெனப் பங்கேற்கும் முதன்மைப் புலவர்கள் கருத்துகளைச் சங்கமிப்பர். புலமைச் செழுமை பெற்றோர்க்கு 'ஞானத் தமிழாகரர்' 'தமிழாகரர்' 'தமிழாளியர்' ஆகிய விருது களும், கவித் திறம் உடையோர்க்கு 'கவிஞர்கோ', பெண்பாற் புலவர்களுக்கு 'செந்தமிழ்த் திலகம்' சமயத் தொண்டாற் றும் அன்பர்க்கு 'திருத்தொண்டர்' ஆகிய பட்டங்களும தமிழ்ச் சங்கம் உவந்தளித்து வருகின்றது.

முதன்முதலில் தமிழகத்தில் கவிதைப்போட்டி வைத்து, பொற்கிழி வழங்கிய அருமை திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம் பெற்றுள்ள தனிப் பெருமை. தருமிக்குப் பொற்கிழி வழங்கிய செய்தியைத் தெரிவித்த அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கை நினைவில் கொண்டுதான், தவத்திரு அடிகளார் பொற்கிழி வழங்கும் அரியநிகழ்ச்சியை, திருப்புத்தூர் தமிழ்ச்சங்கத் தின் வாயிலாக அமைத்தருளினார்கள்.

பொற்கிழி வழங்கிய முதல் அமைப்பு.

திருமுறை விழாவின் நான்காம்நாள் நிகழ்ச்சி யில், அப்பர் சுவாமிகளின் அற்புத வரலாற் றைக் கண்முன் காண வைத்துப் பண்ணிசை

முழங்கும் அரிய பான்மை, பார்த்து மகிழத் தக்கது; நினைந்து நெகிழத் தக்கது.

திருமுறை விழாவில், திருமுறை வாணர்களைச் சிறப்பித்து, 'பண்ணிசை மணி' 'பண்ணிசை அரசு' எனப் பட்டமளித்துப் பாராட்டும் மரபு உள்ளது

## 11. சிறப்புச் செய்திகள்

### பிருகு முனிவர்

★ புராண வரலாற்றில்-பிருகு முனிவர் இட்ட சாபத்தை நீக்கிக்கொள்வதற்காக, திருமால், கொன்றை வனமாக இருந்த திருப்புத்தூர் திருத்தளிக்கு வருகை புரிந்து, திருத்தளிநாதரை வேண்டி வழிபட்டார். திருமாலின் வேண்டுதலுக்கு இரங்கிய பெருமான், பிருகு முனிவரைத் திருத்தளிக்கு வர வழைத்து, முனிவரும் உடன்படத் திருமாலுக்குச் சாப விமோசனம் அருளினார். திருமால் வழிபட்ட இடம் 'அரிபுரம்' என இன்றும் அழைக்கப் பெறுகின்றது. பிருகு முனிவரின் திருமேனி, திருத்தளி ஸ்ரீ கொன்றை யோக நாராயணப் பெருமாள் சந்நிதியில் உள்ளது.

### எட்டு லிங்கங்கள்

★ கொன்றை வனமாக இருந்த திருப்புத்தூருக்கு, 'கௌரி தாண்டவம்' காண இறைவி எழுந்தருளினாள். சுயம்பு லிங்கமாகத் திகழ்ந்த மூல மூர்த்தி,இறைவியின் வழிபாட்டிற்காக, திருத்தளிச் சுற்றில், எட்டு லிங்கங்களாகக் கிளைத்து எழுந்தருளினார். இறைவி 'அஷ்ட லிங்கப் பூஜை' செய்தாள். அம்பாளின் வழிபாட்டில் விளங்கிய எட்டுலிங்கங்களும், காரையூர், அரிபுரம்,மேலத்திருத்தளி, புதுப்பட்டி, நெடுமரம், தென்மாப்பட்டு, முதலிய தலங்களில் எழுந்தருளி உள்ளன.

### ஐந்து கோயில் திருப்பணி

★ திருவண்ணாமலை ஆதீன வரலாற்றில் 45-வது மகா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள அருள் நெறித் தந்தை

அடிகளார் அவர்களின் அருளாட்சிக் காலத்தில்தான் குன்றக்குடி, தேனாச்சியம்மன் கோயில், பிரான்மலை, திருப்புத்தூர், திருக்கோளக்குடி ஆகிய ஐந்து திருக் கோயில்களிலும் தெய்வப் பணிகள் திருப்பணிகள் நிகழ்ந் துள்ளன. நான்கு திருக்கோயில்களில் திருக்குட நன்னீ ராட்டு நடந்து விட்டது. வருகின்ற தைத்திங்களில் திருக் கோளக்குடித் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு நிகழ உள்ளது

## கோட்டைக்குள் கோயில்

★ திருத்தளிநாதர் திருக்கோயிலின் வடக்கிலுள்ள மதில் சுவர், கோட்டைச் சுவராக உள்ளது. கோட்டைக்குள் தான் கோயில் இடம் பெற்று இருந்திருக்கிறது. திருப் புத்தூர் கோட்டை-பழைமை வாய்ந்த பாதுகாப்புக் கோட்டை. கோட்டைச் சரித்திரம் ஆயிரம் ஆண்டுக்கும் மேற்பட்டது! சேதுபதி மன்னர்களும், மருதுபாண்டியர் களும் கோட்டையைப் பேணிக் காத்து வல்லமை கொண்ட அரணாக வலுப்படுத்திக் கொண்டனர்.

## மதுரை சென்ற மாலிக் காபூர்

வடக்கிலிருந்து மதுரையை நோக்கிச் சென்ற மாலிக் காபூரின் முஸ்லீம் படைகள், திருப்புத்தூர் வழியே சென் றிருக்கிறது. திருப்புத்தூரை மட்டும் விட்டு வைக்குமா? திருப்புத்தூர்த் திருக்கோயிலிலும் தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறது. அப்படை விண்ணை நோக்கி நின்ற இராஜ கோபுரத்தை இடித்துத் தள்ளி மண்ணில் கிடத்தி யிருக்கின்றது.

## இராஜகோபுரத் திருப்பணி

★ பல நூற்றாண்டுகளாகப் பழுதடைந்திருந்த இராஜகோபு ரம் இப்போதுதான் திருப்பணி செய்யப் பெற்று, மிகுந்த வனப்புடன் விண்ணை நோக்கி எழுந்து நிற்கிறது. 5 லட்சம் அளவு செலவிடப்பட்டு, தவத்திரு அடிகளார் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம், பெருமக்கள் பலர் வழங்கிய நன்கொடையால் பல நூற்றாண்டுகளின் கனவு நனவாகியுள்ளது.

## அம்பாள் கோயில் இராஜகோபுரம்

★ திருப்புத்தூர் கல்யாண சுந்தரக் குருக்கள் புதல்வர் மிருத்தஜ்ஜயக் குருக்கள் சிவகாமியம்மை யிடத்துக் கொண்ட ஆழ்ந்த பக்தி உணர்வால் 1882இல் அம்பாள் திருக்கோயில் இராஜகோபுரத்தை உருவாக்கம் செய்யத் தொடங்கினார். திருப்பணி முழுமையாக நிறைவு பெற வில்லை. தற்போது தவத்திரு அடிகளார் அவர்களின் அருளாசியோடும், ஆர்வமும் அம்பாளிடத்துப் பத்திமை யும்கொண்ட ஐம்பது சிவாச்சாரியர்களின் ஆதரவோடும், சிவநெறிச் செம்மல் பிள்ளையார்பட்டி கே. பிச்சைக் குருக்கள், அம்பாள்கோயில் இராஜகோபுரத்தை முழுமை யாகத் திருப்பணி மேற்கொண்டு, தெய்வம் மகிழத் திருத்தொண்டு ஆற்றியுள்ளார்.

## அர்த்த மண்டப நுழை வாயில்

★ 1866இல் (அட்சய வருடம்) திருப்புத்தூர் சிவராமன் செட்டியார் மகன் குருநாதன்செட்டியார் அர்த்த மண்டப நுழைவாயில் நிலைக்கும், கதவுகளுக்கும் பித்தளைச் செப்புத் தகடுகள் போர்த்தி, மணிகள் பொருத்தியுள்ள செய்தி கதவின் தகட்டிலேயே பொறிக்கப்பட்டுள்ளது,

## அழகிய ஆறுமுகச் செவ்வேள்

★ அர்த்த மண்டப நுழை வாயிலின் இடது புறம் உள்ள ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை திருவுருவத் திருமேனிகள், குன்றக்குடி சண்முகநாதப் பெருமானின் திருவுருவப் பொலிவைப் பெற்றுள்ளன. ஏறத்தாழ அமைப்பு, சாயல், வள்ளி தெய்வானை தனித் தனித் திருமேனிகள். மயில்-பெருமானின் இடப்புறம் தலையைக் கொண்டிருப்பது - அனைத்தும் குன்றக்குடி அறுமுகச் செவ்வேளை ஒத்திருக்கிறது. எனினும் சிலைகள் சிறியவை. சிற்பி, குன்றக்குடி பெருமானை மனதில் கொண்டு, இச்சிலைகளை உருவாக்கி இருக்கலாமெனத் தோன்றுகிறது.

## பைரவர் கோயில் விமானம்

★ பைரவ மூர்த்தியிடம் நெஞ்சார்ந்த பயபக்தி கொண்ட எழுவன்கோட்டை பத்மஸ்ரீ எம். எஸ். கணபதி ஸ்தபதி

பத்மஸ்ரீ எம். முத்தையா ஸ்தபதி, சட்டநாத ஸ்தபதி, சண்முக ஸ்தபதி ஆகிய சிற்ப வல்லுநர்கள், பைரவர் கோயில் விமானத்திற்கு வண்ணப் பூச்சு சம்பந்தமான எல்லாச் செலவுகளையும் மிகுந்த அக மகிழ்வோடும் ஏற்றுக்கொண்டுள்ளனர். மின்சார அமைப்புப்பொறுப்பை திருப்புத்தூர் சோமசுந்தரம் ஆச்சாரியார் மிக விரும்பி ஏற்றுக்கொண்டுள்ளார்.

## திருப்புத்தூர் திருமுருகன் திருப்பேரவை

★ இருபது ஆண்டுகளாகத் திருப்புத்தூரில் அருள் நெறி ஆன்மீகச் செயற்பாடுகளில் ஆர்வமும், ஆழ்ந்த பக்தியும் கொண்டு, திருத்தொண்டாற்றி வருகிற திருமுருகன் பேரவை, திருத்தளிநாதர் திருக்கோயிலின் திருப்பணி களில் மிகுந்த ஈடுபாடு காட்டி, போற்றத்தக்க சேவை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது, அருள்தரு சுப்பிரமணியர் திருச்சந்நிதி முதலாகத் திருத்தளியில் பல திருச்சந்நிதிகளை, ஆன்மீக அன்பர்களின் அளப்பரிய கொடையால், திருப்பணிகள் மேற்கொண்டு பெரும் புகழ் பெற்றுள்ளது. தவத்திரு அடிகளாரின் அருளாசியைப் பெற்ற பேரவைப் பொறுப்பாளர்கள் திருப்பணியில் மிகுந்த உற்சாகத்தோடும், உள்ளார்ந்த பக்தி உணர் வோடும்ஆற்றிய திருத்தொண்டு என்றென்றும்நினைவில் கொள்ளத் தக்கது; நெகிழ்ந்து மகிழத் தக்கது.

## தென் சிதம்பரம்

★ ஆடல்வல்லான் நடராஜப் பெருமான், இறைவியின் வேண்டுதலுக்கும், இலட்சுமியின் வழிபாட்டிற்கும் இரங்கிக் கருணையோடு தாண்டவம் காட்டியருளிய திருத்தலமாகத் திகழ்ந்து வருவதால், திருப்புத்தூர் திருத்தளியைத் 'தென்சிதம்பரம்' என மகிழ்ந்து அழைக் கும் மரபு இருந்து வருகின்றது.

## சமய சமரசம்

★ திருத்தளியிலுள்ள பைரவ மூர்த்திக்குக் கிறித்தவர்களும், முகமதியர்களும் முடி இறக்குதல் போன்ற வேண்டுதல் களைச் செய்து வருகின்றனர். தங்கள் வாழ்வு மகிழ்ச்சி பெறப் பைரவரின் திருவருள் தேவையென அவர்கள்

உள்ளார்ந்து நம்புகின்றனர்! சனீஸ்வரர், திருத்தளிநாதர், பைரவர் ஆகிய தெய்வத் திருமேனிகளின் திருமுன் வழிபாடுகளும் செய்கின்றனர்! பட்டாணியர் தங்கள் வீட்டு மங்கல நிகழ்ச்சிகளை, பைரவர் வழிபாட்டுக்குப் பின்னர்தான் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. திருப்புத்தூரின் வடதிசையிலுள்ள பள்ளிவாசல் சந்தனக் கூட்டு விழாவிற்குத் திருத்தளிநாதர் திருக்கோயிலின் 'கட்டளைகள்' வழங்கிவருவதோடு, கோயிலார் யானை, மேளம் முதலியவைகளையும் விழாவில் பங்கேற்க அனுப்பி வைக்கின்ற பழக்கத்தை இன்றும் மேற்கொண்டு வருகின்றனர்.

## சேரர் பிரானும் ஆரூர்ப் பெருமானும்

★ செழுந் தமிழ்ச் சேரமான் பெருமாள் நாயனாரும், தம்பிரான் தோழர், தமிழ்நாதர் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இணைந்து, திருப்புத்தூர் வருகை தந்து, திருத்தளிநாதரை வழிபட்டுள்ள நிகழ்ச்சியை-சேக்கிழார்பெருமான், "பாண்டி நாடுதனைச் சார்ந்து, திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சிப் போந்து" எனமகிழ்ந்து கூறியுள்ளார்கள். புரமெரித்தார் திருத்தளிநாதரைப் புலமை கொண்ட இருபெரும் அருட்செல்வர்களும் வழிபடுகிறபோது அப்பேரருளாளர்தம் திருவாயினின்றும் வெளிப்பட்ட தமிழமுதத் திருப்பாசுரங்களைப் பெறுகின்ற பேறு பெற்றோமில்லை! அவை-தொலைந்த தமிழ்ச் சொத்துக்கள் ஆயின! இழந்த சமயச் செல்வங்கள் ஆயின!

## நீள் புகழும் நிலப் பரப்பும்

★ "காசிக்கு அதிகமாம் ஒரு முழம் காரணம் மிகுந்த புத்தூர் கங்கைக்கு ஒரு முழம் அதிகமாம் கமலச் சீதளி தடாகம்!" என ஒரு நாட்டுப் பாடலில் திருப்புத்தூர் 'கோயிலும் குளமும்' சிறப்பிக்கப் பெறுகின்றன. மக்களின் உணர்வில் ஊறிக் கிடக்கும் உள்ளார்ந்த உண்மைக் கருத்துகள், கவிச் சுவையுடன் வடிவம் கொள்ளும் வனப்புத் தானே நாட்டுப்பாடல்கள்? ஆம்! பன்னெடுங்காலமாக மக்களால் சிறப்பித்துப் பேணப்பெற்று, வழிபடும் திருத்தலமான திருப்புத்தூர் திருத்தளியின் பரப்பு, திருத்தளி ஊருணியையும் சேர்த்து - 17 ஏக்கர் 72 செண்ட் ஆகும்.

உ

சிவ சிவ

# திப்புத்தூர் திருப்பதிகம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்களுச்சி யுறையு மிறையாரே.

வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டுந் திளைக்குந் திருப்புத்தூர்
ஊன மின்றி யுரைவா ரவர்போலும்
ஏன முள்ளு மெயிறும் புனைவாரே.

பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயி லுறைவா ரவர்போலும்
தாங்கு திங்க டவழ்புன் சடையாரே.

நாற விண்ட நறுமா மலர்கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை யுடையா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே.

இசைவி ளங்கு மெழில்சூழ்ந் தியல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்
பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே.

வெண்ணி றத்த விரையோ டலருந்தித்
தெண்ணி றத்த புனல்பாய் திருப்புத்தூர்
ஒண்ணி றத்த வொளியா ரவர்போலும்
வெண்ணி றத்த விடைசேர் கொடியாரே.

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தா ரவர்போலும்
மையு ணஞ்ச மருவு மிடற்றாரே.

கருக்க மெல்லாங் கமழும் பொழிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்
இருக்க வல்ல விறைவ ரவர்போலும்
அரக்க னொல்க விரலா லடர்த்தாரே.

மருவி யெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமா னவன்போலும்
பிரமன் மாலு மறியாப் பெரியோனே.

கூறை போர்க்குந் தொழிலா ரமண்கூறல்
தேறல் வேண்டா தெளிமின் றிருப்புத்தூர்
ஆறு நான்கு மமர்ந்தா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே.

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்ல றீரு மவல மடையாவே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவ சிவ

# திருப்புத்தூர் திருப்பதிகம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவனமேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னான்காண்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதம்நான்கும்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண்டோன்காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பாகத்தான் காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத்தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தையானே.

வாராரும் முலைமங்கை பாகத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணுங்
கூரார்வெந் தழலவனுங் காற்றும் நீருங்
குலவரையும் ஆயவன்காண் கொடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்காண் எண்டோ ளன்காண்
கயிலைமலைப் பொருப்பன்காண் விருப்போ டென்றுந்
தேராரும் நெடுவீதித் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தையானே.

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை [யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைக்காட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

ஏடேறு மலர்க்கமலத் தயனும் மாலும்
இந்திரனும் பணிந்தேத்த இருக்கின் றான்காண்
தோடேறு மலர்க்கடுக்கை வன்னி மத்தந்
துன்னியசெஞ் சடையான்காண் துகள்தீர் சங்கம்
மாடேறி முத்தீனுங் கானல் வேலி
மறைக்காட்டு மாமணிகாண் வளத்கொள் மேதி
சேடேறி மடுப்படியுந் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவனென் சிந்தையானே.

கருமருவு வல்வினைநோய் காற்றி னான்காண்
காமருபூங் கச்சியே கம்பத் தான்காண்
பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்
பெரும்பற்றத் தண்புலியூர் மன்றாடிகாண்
தருமருவு கொடைத்தடக்கை யளகைக் கோன்றன்
சங்காதி ஆரூரில் தனியானைகாண்
திருமருவு பொழில் புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தையானே.

காம்பாடு தோளுமையாள் காண நட்டங்
கலந்தாடல் புரிந்தவன்காண் கையில் வெய்ய
பாம்பாடப் படுதலையிற் பலிகொள் வோன்காண்
பவளத்தின் பருவரைபோல் படிவத் தான்காண்
தாம்பாடு சினவிடையே பகடாக் கொண்ட
சங்கரன்காண் பொங்கரவக் கச்சை யோன்காண்
சேம்பாடு வயல்புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தையானே.

வெறிவிரவு மலர்க்கொன்றை விளங்கு திங்கள்
வன்னியொடு விரிசடைமேல் மிலைச்சி னான்காண்
பொறிவிரவு கதநாகம் அக்கி னோடு
பூண்டவன்காண் பொருபுலித்தோலாடை யான்காண்
அறிவரிய நுண்பொருள்க ளாயி னான்காண்
ஆயிரம்பே ருடையவன்காண் அந்தண் கானல்
செறிபொழில்சூழ் மணிமாடத் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தையானே.

புக்கடைந்த வேதியற்காக் காலற் காய்ந்த
புண்ணியன்காண் வெண்ணகைவெள் வளையாளஞ்ச
மிக்கெதிர்ந்த கரிவெருவ உரித்த கோன்காண்
வெண்மதியைத் தலைசேர்த்த தண்மை யோன்காண்
அக்கரும்பு பெரும்புன்னை நெருங்கு சோலை
ஆரூருக் கதிபதிகாண் அந்தண் தென்றல்
திக்கணைந்து வருமருங்கின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

பற்றவன்காண் ஏனோர்க்கும் வானோ ருக்கும்
பராபரன்காண் தக்கன்றன் வேள்வி செற்ற
கொற்றவன்காண் கொடுஞ்சினத்தை யடங்கச் செற்று
ஞானத்தை மேன்மிகுத்தல் கோளாக்கொண்ட
பெற்றியன்காண் பிறங்கருவிக் கழுக்குன்றத்தெம்
பிஞ்ஞகன்காண் பேரெழிலார் காம வேளைச்
செற்றவன்காண் சீர்மருவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

உரம்மதித்த சலந்தரன்தன் ஆகங் கீண்ட
வோராழி படைத்தவன்காண் உலகு சூழும்
வரம்மதித்த கதிரவனைப் பற்கொண் டான்காண்
வானவர்கோன் புயம்நெரித்த வல்லா ளன்காண்
அரம்மதித்துச் செம்பொன்னி னாரம் பூணா
அணிந்தவன்காண் அலைகடல்சூழ் இலங்கை வேந்தன்
சிரம்நெரித்த சேவடிகாண் திருப்புத் தூரில்
திருத்தளியான்காண் அவனென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

## திருப்புத்தூர் திருப்புகழ்

# அருணகிரிநாத சுவாமிகள் அருளியது

கருப்புச் சாப னனைய இளைஞர்கள்
ப்ரமிக்கக் காத லுலவு நெடுகிய
கடைக்கட் பார்வை யினிய வனிதையர் தனபாரங்
களிற்றுக் கோடு கலச மலிநவ
மணிச்செப் போடை வனச நறுமலர்
கனத்துப் பாளை முறிய வருநிக ரிளநீர்போற்
பொருப்பைச் சாடும் வலியை யுடையன
அறச்சற் றான இடையை நலிவன
புதுக்கச் சார வடமொ டடர்வன எனநாளும்
புகழ்ச்சிப் பாட லடிமை யவரவர்
ப்ரியப்பட் டாள வுரைசெ யிழிதொழில்
பொகட்டெப் போது சரியை கிரியைசெய்
துயிர்வாழ்வேன்

இருட்டுப் பாரில் மறலி தனதுடல்
பதைக்கக் கால்கொ டுதைசெய் தவன்விழ
எயிற்றுப் போவி யமர ருடலவர் தலைமாலை
எலுப்புக் கோவை யணியு மவர்மிக
அதிர்த்துக் காளி வெருவ நொடியினி
லெதிர்த்திட் டாடும் வயிர பயிரவர் நவநீதத்
திருட்டுப் பாணி யிடப முதுகிடை
சமுக்கிட் டேறி யதிர வருபவர்
செலுத்துப் பூத மலகை யிலகிய படையாளி
செடைக்குட் பூளை மதிய மிதழிவெ
ளெருக்குச் சூடி குமர வயலியல்
திருப்புத் தூரில் மருவி யுறைதரு பெருமாளே.

—

'எழுத்துச் செம்மல்'

# குன்றக்குடி பெரியபெருமாள்

இருபதாம் நூற்றாண்டு ஐம்பதுகளின் உதய காலத்தில் தவத்திரு அடிகளார் இளைய பட்டமாக வீற்றிருந்தபோது, அவர்கள் நடத்திய திருக்குறள் வகுப்பில் மாணவராகித் தமது இதயத்துள் இலக்கிய உணர்வை வளர்த்துக் கொண்டவர் எழுத்தாளர் குன்றக்குடி பெரிய பெருமாள். மகாகவி பாரதியின் 'இலக்கிய மரபினன்' எனச் சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்பவர்.

அறுபதுகளில் 'கலைமகள்' 'ஆனந்தவிகடன்' ஆகிய இரு இலக்கிய இதழ்கள் நடத்திய திறனாய்வுக் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்று எழுத்துலகில் இனம் காட்டிக் கொண்டவர்.

எழுபதுகளில் தமிழ்நாட்டுச் சமூகங்களைப் பற்றிய குன்றக்குடி பெரிய பெருமாளின் ஆய்வுத் தொடர்கட்டுரையைத் 'தினமணிகதிர்' இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வெளியிட்டது.

எண்பதுகளில் தமிழகத்தின் மாவட்டந்தோறும் சென்று, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகத் திகழும் அமைப்புகளைப் பற்றிய விளக்கக் கட்டுரையை 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' எனும் தலைப்பில் பாரதி நூற்றாண்டு நினைவாக 'அமுதசுரபி' இதழில் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதிப் பாராட்டுகளும், சிறப்புகளும் பெற்றார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக 'ஓம்சக்தி' இதழில், வாழ்ந்தபோதும், மறைந்த பின்னும் தெய்வ அருட் சக்தியுடன் விளங்கும் சித்தர்களைப் பற்றிய ஆன்மீகக் கட்டுரைகளை எழுதி, தெய்வமும் மகிழத் திருத் தொண்டாற்றி வருகின்றார்.

கவிஞர், நாடகாசிரியர், உரைஞர், பட்டிமன்றவழக்உரைஞர், இலக்கிய அமைப்பாளர் 'கோல உரையாடல்' நிகழ்ச்சியில் இளங்கோவாக வேடம் தரிப்பவர்... எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.

பெற்றுள்ள சிறப்புகள் பல. அவைகளுள் சில : 'எழுத்துச் செம்மல்' (வழங்கியவர்கள் தவத்திரு அடிகளா ) கட்டுரைக் கலைஞர் (பேரூர் ஆதீனம்) அறிவுடை நம்பி (புதுகை ஆதீனம்) இலக்கியத் தென்றல் (சென்னை நல்வழி அமைப்பு) பாரதிதமிழ்ப்பணிச் செல்வர் (சென்னை பாரதி இயக்கம்) எழுத்துலக ஜோதி (மதுரை நடனகோபால நாயகி மந்திர்) சென்னை வி. ஜி. பி. இலக்கியப் பரிசு; காஞ்சி காமகோடி பீடத்தின் ஆன்மீகப் பொற்கிழிப் பரிசு.